கடவுள் துணை.

அகஸ்திய முனிவர் அருளிச்செய்த

# கன்மகாண்டம் - நா.

இ ஃ து.

மணிமங்கலம்.

வடிவேலு முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

டி. சாரதா புத்தக்சாலை,

த. துரைசாமி முதலியாரால்

சென்னை,

புவனேஸ்வரி அச்சுகூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

இதன் விலை] 1929. [அணா 8

நெ. 23, பாலையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, சென்னை.

# அயக்காந்த தி[ரா]வகம்.

மித்திரர்களே இந்த அபூர்வமருந்தானது அநேக கொடிய வியாதி களை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது இதை அனேக ஆயிரங்கணக் கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர் வியாதியினால வது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத் தைப்புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும் ஆங்கிலேய முறைப்படி. தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து சாப் பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும் இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதைஉட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரிய மான சுகத்தைப் யடைவார்கள் இதனால்தீரக்கூடிய அநேக வியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறித்திருக்கிறோம்.

நரைத்த மயிரைக் கறுப்பாக்கும் உஷ்ணத்தினாலாவது புழுவெட் டினாலாவது மயிர் உயிர்வதை நிறுத்தும் நீர் வியாதிகள் தீரும் கண் ணெரிச்சில் கைகால் காந்தல் இவைதீரும் முகவசீகரத்தை உண்டாக் கும் தேக அசதியையோட்டும் ஜீரணசக்தியையும் நல்ல பசியையும உண்டாக்கும் மனதை அதிக உற்சாகப்படுத்தும் நரம்புகளுக்குஅதிக வலுவைத்தரும் தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுறப்பிக்கும் க்ஷய ரோகத்தை தீர்க்கும் க்ஷணத்தில் வாதபித்த சிலேத்துமத்தாலுண்டா கும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்ததாதுகளுக்கும் நல்ல பலத் தைத்தரும் மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவைதீரும்!

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 20-நாள் சாப்பி டால் இணையில்லாத ஆனந்தத்தைத் தரும் இழந்துபோன தேகதிட தைப் பழையபடியடைவதற்கு இதைவிடவேறு மருந்தே கிடையா 40-நாள் மருந்து உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அ மனிதனின் நிழலைக்கூட அணுகாது பத்தியமும் கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ள வேண்டியமுறை அரைக்கா ஆழாக்கு சுத்த ஜலத்தில் திராவகத்தை 5-துளி அல்லது-7 துளி அதி விட்டுக் கலக்கிக்குடித்துவிட வேண்டும் பத்தியமேகிடையாது இதை பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

| | | |
|---|---|---|
| அரைமண்டலம் 20-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டி | 1 | 4 |
| ஒரு மண்டலம் 40-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டி | 2 | 0 0 |

டி. சாரதா புத்தகசாலை,

நெ. 23, பாளையப்பன் தெரு, மிண்ட் போஸ்டு, மதராஸ்.

S·183

உ

கடவுள் துணை,

# அகஸ்திய முனிவர்

அருளிச்செய்த

# கன்ம காண்டம்-நூ.

## வியாதி வகை.

பூரணமாய் மூலமுத லாராதாரம்
  புரியவஷ்டந் தசவாய்வு நாடிமூன்று
காரணமா யிடைபின்னாய் சுழிமுனையுமாகிக்
  கலந்துநின்ற வாதபித்த சிலேத்துமமாகி
மாரணமாய் சடத்துனுள்ளே தத்துவங்கள்
  மனம்புத்தி யாங்காரஞ் சித்தத்தாலே
வாரணயாய் நடத்துவித்த கர்மத்தாலே
  வந்ததடா நோய்களெல்லா மனிதர்க்காமே. 1

ஆமப்பா மனிதர்செய்த கர்மத்தாலே அரகரா மேக மன்ற ராசாவாலே, காமப்பால் வீதனத்தாற் பொசிப்பிலுங் கைக்கடங்கா நோய்கள் வருங்கர்மத்தாலே, போப்பா மேகம்வந்த காரணந்தான் புகலுவே னுயிர்வதைன் செய்வதினாலப்பா, நாமப்பா கண்டபடிசொன்னேங்களுந நலமான வாதசலம்பித்தசலமாமே. 2

செலமான சிலேத்துமந்தான் சலமூன்றினாலே சேர்ந்துகொண்டு இருப்பதென்ற சலமதாச்சு, நலமானபேர்காகுத்துச் சொல்லக்கேளுந நல்ல கெந்தனுருத்திராங்ரிந்திரகண்டி, குலமான சலதோத்திரன பச்சைவர்னன் கொடியருசிகன்சிலாங்கன் ரெந்தவர்னன், பெலமான பீதவர்னன் ரத்தினவர்னன் பேசரிய சம்பிராசனனந்தனாமே. 3

அனந்தனொடு நீலகண்டன் தவளவர்னன் அதிபிரபுன்மதுவேகனத்தனோடு, சினந்தணிக்குமெலும் புருக்கி

புஷ்பராசன் சேர்ந்தவகை யிதுக்குங் குணத்தைக்கேளு, மனந்தனிலே கெந்தனுக்கு மாம்பூவாசம் வாதத்தாலெழு ந்த சலப்புளிப்புமெத்த, குணந்தனிலே ருத்திராங்கன் தாழம்பூவாசங் குனிப்பாகுஞ் சிலேத்துமத்தி லெழுந்த மேகம். 4

மேகமிந்த யிந்திரகண்டி செண்பகப்பூவாசம் வேக மடாசிலேத்துமத்தில் பித்தங்கூடில், நாகமென்ற விஷத் தினுட ரசமேபோலாம் சலதோத்திரன் குங்குமப்பூ வாசகம், போகமென்ற நாக்கிட்டால் கைப்புளிப்பாகும் புகழ்பச்சை வர்னனுக்குத் தசைநாற்றந்தான், தாகமடா மிகுந்திருக்கும் வாதபித்தந் தன்னாலே புளிகசப்புகுணம தாமே. 5

குணமான ருசிகணக்குப் பானக்கம்போலுங் கொள் ளுமடா வாசமது கொடியகைப்புபித்தம், மணமான சிலாங்கனுக்குக் காடிநாற்றம் மைந்தனே கைப்புளிப்பு வாதநீராம், நிணமானரத்தயிர் னனுதிரவாசம் நல்லசல மினித்தகுணம் சிலேத்துமந்தானப்பா, பிணமான பீத வர்னனுப்பு நாற்றம் பெரும்பித்தம் உப்பினுடரசனை யாச்சே. 6

ஆச்சப்பாரத்தினவர்னனலரிப்பூவாச மதின்குணந் தான் வாதபித்தமதனில் தோன்றும், போச்சப்பாசம்பிரா சன் கோமூத்திரம்வீசும் பெரியசலமதுவாய் நீர்பித்தம் வாதம், நீச்சப்பா அனந்தனுமோ சர்மந்தான்வாசம் ரசனையடாசீனியது சிலேத்துமமாகும், மூச்சப்பா நீல கண்டன் மூத்திரம்போல்நாறும் முகம்பிடிக்கப் போகாது எறும்பெரிக்குங்காணே. 7

காணப்பாசேத்துமபித்தங்கைப்புளிப்புமாகுங் கரு தியதோர் தவளவர்னன் சாணகம்வீசும், பேணப்பா சக்கரைபோ லினித்ததுசேத்துமம் பிரமனதுசந்தனம் போல்வாசமாகும், மூணப்பாமிளகதுபோ லுறைப்புச் சேரும் மூத்தபித்தவாதமது நிறைந்துபாயும், பூணப்பா மதுவேகன் கள்ளினாற்றம் பூண்டசிலேத்துமவாதம் புளிப்பதாமே. 8

புளிப்பாகுஞ்சத்தனாமோ பால்போல்வீசும் புகழான வெண்ணையுடரசனையாகுஞ், சளிப்பானவாதபித்தமிகுத்த நீருந் தளர்ந்தஅக்கிசுண்ணம்புபோலாம்வாசங், களிப்பாகுஞ்சுண்ணம்போல் கடிப்புமாகுங் கண்டுகொள்ளுந பித்தசிலேத்துமந்தானப்பா, துளிப்பானவெலும்புருக்கி மூளைநாற்றஞ் சொல்லுகிறேன சிறுகைப்பு வசம்பின் காரம். 9

வசமாகும்வாதபித்தந்தொந்திப்பாகும்வாயத்தபுஷ்பராதனாமோ மல்லிகைப்பூவாசம், நிசமாகுமெரித்தநீர் பித்தநீராம் நில்லாதுவாதத்தில்நீர்மூனப்பா, திசமான துவாதசத்தில் நீர்தான்போகச் செப்புவேன்கர்மங்கள் துலையச்சொல்வேன், கசமானகுடந்தனிலே நீரெடுத்து கணபதிக்கும் நந்திக்கும் அரசடிக்கும் வாரே. 10

## கர்மநிவர்த்தி.

வாரப்பா சூடம்நூறுநந்திவலம்வந்து மைந்தனே சிவபூசை விஷ்ணுபூசை, நேரப்பாகோதாணம் ஓமராந்தி நிதம்பத்துத்திரஞ் செய்யில் தீருங்கர்மம், பாரப்பா கர்ம நிவர்த்திசெய்யாவிட்டால் பலியாது வயித்தியத்தான் கர்மத்தாலே, பேரப்பா மருந்தினால் பிணியே தீர்ந்தால் பெருத்த கர்மம்வயித்தியனைப் பிடிக்குமன்றே. 11

பிடியாமல் வயித்தியந்தானோய்களுக்குப் பெருத்த கர்மந்தீர்ப்பதற்குப் பேணிசொல்வேன், மடியாமல் கர்மங்கள் நிவர்த்திசெய்து வையகத்தினோய்தீர்த்தால் வயித்தியனாகும், கடிதானநோய்களுக்கு மருந்துசெய்தால் கர்மங்கள் போவதெங்கே கண்டுசொல்லுங் குடிவழியே தொடருமடாகர்மந்தானாங் குறிப்பறிந்துகர்மத்தை நிவர்த்திசெய்யே. 12

## மேகசாரங்கம்.

சொல்லுதற்கு மேகராசாங்கம்சொல்வேன் திறமான வாதிமகன்வயித்தியனாகில், வெய்வதுவாங்குறுந்தொட்டி பலதூலப்பா வேணுமென்ற விலாசமிச்சுபேராமுட்டி, கைவசமாய்நறு நீன்றிக்கீழாநெல்லி கனமானவெட்டி

வேரிருவேலிவேறும், சைவமென்ற வில்வவேர் மதுரத் தோடு சார்வான அமுக்கருவேர் கஞ்சாவேரே. 13

கஞ்சாவும் நிலப்பனைய முத்தக்காசுங் கனமான அமிர்தவள்ளி அறுகுகேளு, மிஞ்சாமல்வகைநூறுபல மாய்வாங்கிவிடு நூறுக்கெண்படிதான்வற்றக்காச்சி, தஞ்ச முடனெட்டி லொன்ருய்க் குறுக்கிவாங்கித் தன்னுக்கு வின்னமொருசார்வுகேளு, பஞ்சதிரவியம் நெஞ்சில் நாயுருவிமூலம பாரப்பாதாதுவளை மூலத்தோடே. 14

மூலமிடலுல்விழுது குருவிஞ்சிகமுகுமுற்றினதோர் வெள்ளைசிறுவழுதலையின்வேருஞ், சாலவேவகைக்கு ஒரு பலமாய்வாங்கித் தான்தூணி நீர்தன்னில் போட்டுக் காச்சி, ஏவவேயெட்டிலொன்ருய்க் கியாழம்வாங்கி யிரு நீருங்கிடாரத்தில்விட்டுப்பின்பு, பால்வகையாம் நாவல் மரப்பட்டை வகைகொண்டு பலமூன்ரு மாவாரையின் பட்டைமூன்றே. 15

மூன்ருனபொன்முசுட்டைவேர் பலந்தான் மூன்று முழுதுமதுசிலைசுட்ட சாமபல்மூன்று, ஏன்றதொருமாத ளையின் வேர்பலந்தான்மூன்று இயல்பானதிரிபலையின் வேர்பலந்தான்மூன்று ஆன்றதொருவூமத்தன் வேர்பலந் தான்மூன்று, அத்திவேர்பலமூன்று ஆகவொன்ருய் பாண்டமதிலிட்டேதான் தூணிநீர்வார்த்து பரிவாக வெட்டிலொன்ருய்ப் பதத்தில்வாங்கே. 16

வாங்குவதுஇன்னமொரு வகையைக்கேளு வள மான நீர்வள்ளிக்கிழங்குகொட்டி, பாங்குடனே தாமரை யின் வளையம்நெல்லி பரிவானகாட்டத்திப்பூ முருங்கைப் பூவுந், தாக்கியதோர்தூதுளைப்பூ மாதளைப்பூவுந் தனி வில்வம் நெல்லிப்பூதாழம்பூவு, மாங்குநெரிஆவாரங்கரு வேலம்பூ வளமானமுசுட்டைவழு தென்னம்பூவே. 17

பூவெல்லாம் வகைக்குஒருபலமாங்கிப் புதுப்பாண் டத்துள்ளிட்டுத் தூணிநீர்விட்டு, பாகமாய்க்காச்சியதை யெட்டொன்ருய்வாங்கி பாங்கானகியாழமெல்லாம் ஒன் ருய்விட்டு, ஆவின்பால்படியொன்றுசெவ்விளநீரொன்று ஆண்பனையின்பாலொன்று ஆட்டின்பாலொன்று காவல்

செறிமங்கையர்தன் முலைப்பாலொன்று கதித்தபழச்சாறிரண்டுகலந்துவாரே. 18

வார்த்தபின்பு யின்னமொருவகையைக்கேளு வளமானவெள்ளுடனேமுருங்கைவித்து, தேற்றான்தன்வித்துடனேபருத்திவித்து தேனுடனூர்ந்திடுமியானைநாரத்தம்வித்து, தோற்றமுள்ளதும்பைவித்து நெருஞ்சிவித்து துளசிவித்துபூவரசின் வித்தினோடே, தோற்றமுள்ள வெள்ளைத் தாமரையின்வித்து சுகமானகடலையுட னுளுந்துமாமே. 19

ஆமென்ற நீர்முள்ளிகாமப்பூவும் அறிந்தமற்றைவித்துடனே கஞ்சாவித்து, ஓமென்றவகைக்கொரு பலமாய்வாங்கி உத்தமனே தாணிநீர் விட்டொன்றாக்காச்சி, தாமென்றகியாழமின்னஞ் சொல்வேன்கேளு சாதிக்காயேலமுடன்தகரங்கோஷ்டம், வாமென்ற வாலுழுவைசீரகம்வெந்தியம் வாகானசந்தனமுஞ் சந்தனமுமாமே.

ஆகவேவகையொன்று பலமொன்றாக அளவாகத்தாணிநீர்விட்டுக்காய்ச்சி, வேகவே யெட்டிலொன்றாய் வாங்கிக்கொண்டு வெள்ளறுகுநீர்படிதானென்றுகூட்டித், தாகவேசரக்குவகை யின்னமொன்று சொல்வேன்தனிப் பூனைக்காஞ்சியுடசாறுநாழி, நாகவல்லிச் சாறுடனே முருங்கைச்சாறு நற்கதலிச்சாறுடனே நாழிகூட்டே. 21

கூட்டுவாய் செங்கருப்பஞ்சாறுநாழி கூட்டியேயொன்றாகக்கியாழத்தில்சேர்த்து, நாட்டுவாய்கியாழத்திலெண்ணைசேர்க்க நெல்லெண்ணைவேப்பெண்ணை நறுநெய்மூன்று, மூட்டுவாய் வகையொன்றுக்கேண்படிதானப்பா மூதண்டக்கியாழத்தில் முறைதப்பாமல், ஆட்டுவாய்கற்கவகை சொல்லக்கேளு ஆனதொருவால்மிளகு நறுக்குமூலம். 22

மூலமுடன் திரிகடுகுதிரிபலாதி முந்திரிகைபேரீச்சு மிளகுகூட்டி, ஏலமுடன்கற்கண்டு வாங்காளச்சீனியின் பூரல்வேருடனே முந்திரிக்காய்கூடன், சாலவருங்குங்குமப்பூகுளவிந்தமஞ்சள் சாஸ்திரமாம் பேதியுடன் தக்

கோலங்குக்கில், பாலைதென்ற அரிசிவகை சொல்லக்கேளு பாங்கான செவ்விள நீர்கடலழிஞ்சில். 23

கடலானபத்திரியுங்கிராம்புஓமங் கசகசாமந்திவஷ்டி சாரப்பருப்பு, மடலான துத்தமுடன் கஸ்தூரிகுங்குமப்பூ மகத்தானகிராம்பவனி குராசானி, உடலானகூகைநீற ரத்தை அக்கிராஉருத்திராட்சங் கலைக்கொம்புமிருகக் கொம்பு, மடலான நற்பவளஞ் சங்குகோஷ்ட மரிவெள்ளி லோத்திரம்பச்சைப்பூரம். 24

பூரமுடன் புழுகுகோரோசனைதானும் புகழ்காஞ் சிலாசத்துபுரோசம்வித்து, காரமுடனமுக்கிரா சமுத்தி ராச்சோதி கம்பியாம்பிசினுடனே கழஞ்சிரண்டுபத்து, வாரமுடன்கியாழத்தி லரைத்துமையாய் வாகுசிறுபாகு போல்கரைத்துக்கெகண்டு, சாரமுடன்மண்டலமே காய் ந்துவற்றித் தான்மெழுகுபதமானல் வடித்துவாங்கே.

வாங்கிடுவாய் பீங்கானில்பாண்டத்துள்ளே வைத் திடுவாய்மண்டலந்தானெற்குழியினிள்ளே, பாங்குடனே தயிலமது வடிக்கும்போது பரபூசை சிவபூசைவிஷ்ணு பூசை. ஓங்காரமுதலான மூலமந்திரம் உறுதியாய்க் கண பதியும்வயிரவனுங்கூட்டி, ஏங்கியேதிரியாதே வயித்திய சாப மேகிடவேலட்சமுரு வேற்றிக்கொள்ளே. 26

கொள்ளவே வேதியாக்குஅன்னதானங்கொடுத்துநீ தயிலமது காசெடைதானுண்ண, மெள்ளவேமண்டலந் தான்தயிலமுண்டால் வீரியத்தைச்சொல்லுகிறேனேய் தீராதோ, தள்ளவேதீரும்நோய்சொல்லக்கேளு சார்வான மேகவகையிருபதுந்தானெங்கே, கள்ளமாம்வாதமெங்கே க்ஷயரோகமெங்கே கண்காணுதோடுமடா கண்டுபாரே. 27

பாரடா பித்தமென்றதெல்லாம்போகும் பகையான குன்மமொடு குஷ்டம்போகும், நீரடாசூலையென்றதெல் லாம்போகு நிசமென்றுகொண்டாக்கால் கண்ணேய் தீரும், ஏரடாதங்கம்போல்தேகமாகு மெடுத்தெடுத்தரோக வகையெல்லாந்தீரும், ஆரடாவென்னைப்போலே சொல்லப் பாறோர் ~~சொன்~~ ஆச்சரியந்தயிலத்து அமுர்தமாமே. 28

அமுர்தமென்ன விதுக்கீடோ கொண்டாயானால் ஆகாதநோய்களெல்லாமகன்றுபோச்சு, குமுர்தலிகுண்டலிக்குள்நந்திமீறுங் குறிப்புடனேபத்தியந்தான் கூறக்கேளு, திமிர்தமெனப்பாக்கிலையும் புளியுமுப்புந் தின்பண்டமென்றவகை ஒன்றுமாகா, கமுர்தமென்றபால்சீனி பத்தியந்தான் கறிவகைக்குப்பாலுப்புக்கண்டமாமே. 29

கண்டுகொள்ளு பத்தியத்தில்கறியைக்கேளு கதலியுடகாயாகு முருங்கைப்பிஞ்சும், தண்டுசிறு கீரையுடன் நெல்லிக்காயும் தான்துவரைஅவரையுட பிஞ்சுமாகும், பண்டுநெய்பால் கற்கண்டாந்தூளங்காயாகும் பரிவானமூசலுமேபறவையிலேகாடை, கொண்டுடனே வெள்ளாடு வெள்ளெலியுமாகுங் குளத்திலுள்ள அயிரைவிரால்சாரையாமே. 30

ஆமிந்தவகைக்குளிட்டு அவிக்கக்கேளு ஆனதொரு நல்மிளகுசீரகங்கஸ்தூரி, தாமிந்தசாதிக்காய் கருவாய்ப்பட்டைதான் கறுத்தவேப்பிலையுஞ்சக்கரை நெய்மஞ்சள், ஓமிந்தபடிகூமைத்து உண்பதற்குச்சோறு உத்தமனே குருவைவால்குருவையாகும், நாமிந்தத்தயிலவகை யார்க்குச்சொன்னோம் நல்லோர்க்குயித்தயிலம் நன்றுங்காணே.

## அப்பிரேகசெந்தூரம்.

காணப்பா வின்னமொருசெந்தூரந்தான் காசினியோர்பிழைக்கவென்று கருவைச்சொல்வேன், பூணப்பா சர்வாங்கநோய்களெல்லாம் புகலுவேனன்றுகப்பூண்டு கேளு, தோணப்பா அப்பிரேகநவநீதத்தைச் சுறுக்காக வெள்ளெருக்கம்பாலைவிட்டு, ஊணப்பாசதுர்சாமமரைத்துக்கட்டி யுறப்பாகக்கெசபுடத்திலொன்று தீரே. 32

தீர்ந்தபுடமாறியபின் னெடுத்துக்கொண்டு செம்முள்ளிச்சாற்றினாலரைத்துக்கட்டி, வார்ந்தபுடமுன்போலே ஒன்றுதிரு மைந்தனே ஆலம்பால்விட்டுஆட்டி, சேர்ந்த பில்லைகாய்ந்தபின்பு புடத்தில்போடுதிறமான பொற்றலையின்சாற்றாலாட்டி, தேர்ந்தபுடமுன்போலே சேர்த்துவாங்கு திறமானபூநீறுகமூஞ்சுசேரே. 33

சேர்த்துமுலைப்பால்தன்னில்சாமமாட்டி செங்கல் லென்றகுகையில்வைத்துப் புடத்தைப்போடு, பார்த்திட வேசெந்தூரம் பவளவர்னம் பாரித்தநோய்களெல்லா மிடையிடையில்தீரும், வார்த்தந்தத்தயிலத்தில் கூட்டிக் கொள்ளு மண்டலத்தில் மேகமெல்லா மாண்டுபோகும், கற்றிடுமே மேகராசாங்கக்கற்பங் கைகண்ட செந்தூரம் கலந்துகொள்ளே. 34

## தலைமுழுகத்தைலம்.

கண்டுகொள்ளு தலைமுழுகத்தையிலமொன்று கைச் சோலம்நன்னாரி விலாமிச்சம்வேர், மண்டுகொள்ளு மிரு வேலிவெட்டிவேரும் மாதளைவேர் வில்வமூலை அருக் கருவேர், தண்டுகொள்ளு மிளகுடனே தாளிவேருந்தான் கீழாநெல்லியுடன் குறுந்தொட்டிவேரும், பண்டகிலுன் சந்தனமுந்தேவதாரம் பாரப்பாவகையொன்று பலந்தா னென்றே. 35

ஒன்றான நீர்படிதானுற்பத்தெட்டு உத்தமனே யெண் ணழியாகவாங்கி, வன்றான நல்லெண்ணை படியெட்டாகும் பாங்கானசெவ்விளநீர் படிதானஞ்சு, மன்றானபால்நாலு மூலைப்பாலொன்று மதுமத்தஞ் சார்நாழிமதுதானுழி, கன்றானகரிசாலைச்சாறுநாழி கண்டங்கத்திரியின் வேர்க் கியாழம்நாழி. 36

நாழியொன்றுதக்களிச்சாறுதானும் நல்மிளகுகியாழ மது நாழிகூட்டித்,தாழிதனிலொன்றாகவார்த்துக்கொண் டுதக்கோலஞ்சாதிக்காய்மதுரங்கோஷ்டம், கோழியென்ற தார்தோளிநீர்க்கார்கோழி கொத்தமல்லிவால்மிளகு கட் டழகுசட்டம் நீழியென்றமரமஞ்சள் சடாமஞ்சில் நிறை யாக வகைக்குநாற்கழஞ்சியென்றே, 37

என்னுமிந்த மருந்தெல்லாமரைக்கும்போது இய லான ஆட்டின்பால்விட்டுஆட்டி, நன்னயமாயெண்ணை யிலேகரைத்துவைத்து நன்மைபெறவேணுமென்றுகணே சன்பூசை, அன்னமுடன்பால்பழங்க ளிளநீர்தேங்காய் ஆலத்திக்கற்பூரந்தீபமாட்டி, சொன்னபடி மெழுகுபதந் தன்னில்வாங்கித் தோன்றவடிகலசமது தன்னில்கேளே.

கேளப்பா கற்பூரங்குங்குமம்பூ கிளர்புழுகுசட்டங் கோரோசனையும்போட்டு, நாளப்பாவடித்துடனே யேடு கட்டி நலமாகவைத்துவைப்பாய் முழுகும்போது, வேள ப்பா சீயக்காய்வெந்நீராகும் மெய்யெல்லாஞ்சந்திரன் போல்காந்தியாகுஞ் சூளப்பாமேகசலம் பறந்துபோகுஞ் சூத்திரத்தில் சூத்திரமாய்ச் சொன்னேன்கேளே. 39

சொன்னதொரு மூந்நூறுமிதுமிந்நூறுஞ் சூத்திரத் தில் குறுக்கியது மூப்பத்தஞ்சில், இன்னமொரு அன்பது மூற்றன்பதுண்டு இதுவைந்துங்கர்மசூத்திரந்தானப்பா, மூந்நூல்தானுயிரத்திருநூறு மூண்டு முறையானகருவெல் லாஞ்சொன்னேன்பத்தில் என்னூல்போ லொருநூலுஞ் சொல்லாதப்பா வெடுத்தெடுத்த உரைகளெல்லாமேற்றந் தானே. 40

க்ஷயரோகம்வரலாறு.

ஏற்றமெனர் க்ஷயரோகம்பொல்லாரோக மேதகலே வந்துதென்றால் சொல்வேன்கேளு, மாற்றமாஞ்சென்மத் தில் பொன்னூறுந்தான் வாங்கினதோர் கடன்தன்னைக் கொடாதபாவம், சேற்றதொரு நித்திரையில் மோகினி போல்மோகஞ் சேர்ந்தணைந்தபோதெல்லாம் க்ஷயரோக தான், சீற்றமென்னகடனென்றால் பொல்லாதப்பா சென் மித்தவாறிதுதான் தெளிந்துபாரே. 41

கர்மநிவர்த்தி.

தெளிந்துக்கொண்டு க்ஷயரோகம் வந்துதானால் செய்வதொரு கர்மங்கள்தீர்க்கச்சொல்வேன், அளிந்தி டாக்கன்னியர்க்கு வஸ்திரதான மன்னதானமிடுவாய் தினம்நூறுபேர்க்கு, மொளிந்ததொரு மண்டலமேகன்னி யர்க்கு முறையான அன்னதானம் வஸ்திரதானமுகித்து ஒழுந்தபின்பு சிதம்பரத்தையெழுதிக்கட்டி யுறப்பாகப் பின்பவர்க்கு மருந்துசெய்யே. 42

க்ஷயத்துக்குதாளகபற்பம்.

செய்வதற்குப்பற்பமொன்று சொல்லக்கேளு திற மானதாளகந்தான் சுத்திசெய்து, ஐவிரலிச்சாறுதான்

சுறுக்குத்தாக்கு அப்பனே மூன்றுபடியானபின்பு, கைவச மாய் பசளைச்சார் சுறுக்குப்போடு கலங்காதே ஒருபடி தான்கண்டுகொள்ளு மைவிழியாயெருக்கம்பால் கூட்டி யாட்டி வைவில்லைசெய்துடனே ரவியில்வையே. 43

ரவிதனிலே யுலர்ந்தபின்புசீனச்சுன்னம் நலமாகக் கீழ்மேலாய் நடுவில்வைத்து, கவியவேமுத்தியும் மூன்று சாமம்கட்டாகவெரித்திடவே வெளுத்துநீரும், புவிதனி லேயின் நீற்றைவைத்துக்கொண்டு போடவேபணவிடை தான் சர்க்கரையில்பொதிந்து, கவியானக்ஷயரோகமந் தாரகாசங் கக்குகின்றரத்தமொடு பித்தகாசம். 44

காசமொடுமேலிளைப்புஈளைகாசங் கதித்ததொருவில் வகை நோய்காணுதோடும், பாசமென்ற ரோகமெல்லா மறுத்துத்தள்ளும் பறக்குமடாகுஷ்டமொடு சூலைரோகந் தேசமெய்த்தமேகராசாங்க வெண்ணை சேர்த்துநீ கொண் டிடவேதிருந்திரும், நாசமதாம் நோய்களெல்லாம்பத்திய மாய்க்கொள்ள நமனில்லைபதினெட்டுக் குஷ்டம்போமே.

ரசபற்பம்.

போமென்னபற்பமொன்று சொல்லக்கேளு புகழா கச்சுத்திசெய்த ரசம்பலந்தானென்று ஆமென்ற கெந்தக முங்காட்டுள்ளிக்கூட்டி அடவானதயிலமது இறக்கிக் கொண்டு, வேமென்றரசத்தைவிட்டுச் சாமமாட்டிவெய்யி லிலே வைத்தவுடனீரும்பாரு, மென்றதயிலம் விட்டு ஆட்டிவில்லை சாதகமாய்க்காய்ந்தபின் புடத்தில்வையே.

வையப்பாக் குக்குடத்திலிடைபோகாது வாயிலேகட் டாது ரசகற்பூரம் செய்யப்பா குஷ்டமொடுகிரந்திசூலை சொல்லரிய மேகவகையெல்லாம்போகும், மெய்யப்பா புண்வகைகளெல்லாந்தீரும் வெளுப்போடு வீக்கமுதல் வியாதிதிருங் கையப்பாவண்டுகடி பீனசமுந்தீரும் கபா லத்திற் சூலையொடுபவுத்திரமுந்திரும், பையப்பா புற்று வகையெல்லாங்கட்டும் பயக்குமப்பா ரசபற்பம்பரிந்து பாரே. 47

பரிவாகவின்னமொரு லேகியத்தைக்கேளு பண்
பான தூதுளைவேர்சங்கம்வேருந் தெளிவானகண்டங்கத்
திரியின்வேருஞ்சிறுபாலை சிறுவழுதலையின்வேரும் உரித்
தான திரிகடுகுசம்பிரேடு உத்தமனேவில்வவேர் அழுக்
கருவேர் நரிமிரட்டிசெய்மூள்ளி கீழாநெல்லி நலமாக
வகையொன்று பலமொன்ருக. 48

ஒன்ருகக்சூரணித்து வைத்துக்கொண்டு ஒருபடி
தான்பிரமிச்சார் தூதுவளைச்சாறும் பன்ருனசங்கஞ்சா
ருடாதோடை பரிவானமுருக்குவில்வம் பருத்தமூல்லை
நன்ருனகொடிவேலிவேர் கியாழமாக னலமாகவகை
யொன்றுபடியொன்ருக ஒன்ருனசாறெல்லா மொன்றில்
விட்டு உத்தமனேபாகுபதம் வருநேரத்தில். 49

வருநேரஞ்சூரணத்தையிட்டுக்கிண்டி வளமானதே
னதிலேபடியளவைதான்விட்டு கருவாகநெய்தன்னை விட்டுக்
கிண்டி சாதகமாம் மெழுகுபதமானபோது குருவானபதம்
போற்றிப்பதனம்பண்ணி கொடிதான நோய்களுக்குக்
கழஞ்சிகொள்ளு உருவானதாளக பற்பஞ்சூத பற்ப
முறைப்பாகப்பணவிடை தான் லேகியத்திற்கொள்ளே.

கொள்ளையிலே பாலொடுசிறுபயறுமாகுங் கொண்ட
பின்புக்ஷயரோகஞ்சூலைகுட்டம்வெள்ளையென்றவெளுப்பு
மூதலிளைப்புகக்கல் விஷக்கடியுங்குறைநோயு மீளுமீளுந்
தள்ளையென்ற சூதபற்பமரிதாரபற்பம் தடையுறவே
சண்ணுமடாதாக்கிப்பாரு பிள்ளையென்று நோயாளிபணி
வானுகில் பிணிதீரும்பணியானல் பிசகுதானே. 51

## குட்டத்திற்குத்தயிலம்.

பிசகாமல் வயித்தியர்க்குமனம்நோகாமல் பேணியே
கொண்டாக்கால்சாவேயில்லை அசகாமல்கர்மங்கள் நிவர்
த்திசெய்து ஆனதொரு லேகியத்தை மண்டலந்தான்
கொள்ளு பாங்குடனேசெய்வதற்கு மூறையைச்சொல்
வேன்வசமானவேப்பரிசி அழுஞ்சில்வித்து மாவிலிங்கம்
வித்துடனே மூருங்கைவித்தே. 52

வித்தானமுட்டிவித்து பேச்சுரைவித்து விழுதி
வித்துகரை வித்துவில்வவித்து முத்தான ஆமணக்கம்

புரசம்வித்து முருங்கைவித்து திரிபலையும் வசம்பினேடு
பத்தானகொடி வேலிதேற்ரும்பட்டை பறங்கிபட்டை
சேங்கொட்டைகார்காலோடு மத்தானவூமத்தை வாலுழு
வைவித்துவாகானதகரையுடன் சிவனர்வேம்பே. 53

வேம்பானகருஞ்சீரகம் வகையொன்றுக்கு வெள்
ளறுகுவேருடனே வெந்தோன்றிடாகுந் தாம்பானபல
மொன்று குழித்தயிலம்வாங்கி தனிய்யும்வேப்பெண்ணெ
நாழிகூட்டி சோம்பானதயிலமது நாழியாகத் துடியாக
அனலேத்திவைத்துக்கொண்டு பாம்பானகுட்டமது பதி
னெட்டுக்கும் பரிவாகமேற்பூசுமண்டலத்தில்பாரே. 54

பாரடா சட்டையொன்று தள்ளுந்தள்ளுந் பசும்
பொன்போல் தேகமுமாம்பரிந்துகாணு, நேரடாமுன்
சொன்னதைலமுழ்க நிசமானவார்த்தையிது சுருக்கு
மெத்தக் காரடாகுருவினுடபாதத்தன்னைக் கதிகெட்ட
நோளிநோய்தீரவென்ருல ஊரடாமிருக்கின்ற வயித்தி
யர்க்கு உறுதியுள்ளதங்கமடா இந்தநூலே. 55

வாதகர்மப்வரலாறு

நூலென்றவ தம்வந்த வகைதானேது துண்மை
யாய்க்கர்மத்தின் வகையைக்கேளு காலிலேதோன்றியது
கடுப்பதேது கைகாலில்முடக்கியது வீக்கமேதுகோலிலே
படுகின்றவிருட்சமான குழந்தைமரந்தனை வெட்டல்மேல்
சீவல் நாலிலேசீவசெந்து கால்முறித்தல் நல்லகொம்பு
தழை முறித்தல் நலிதான்காணே. 56

கர்மநிவர்த்தி.

நலியாலேவந்தகர்மந் தீரவென்ருல் நல்மரங்கள்
தோப்பானநடைசாலைவைத்தல் தெனிவானகிணறுவெட்
டல் திருக்குளங்கள்வெட்டல் தெய்வதலங்கோயில் கட்
டத்திரும்பாரு எளிதானபாலகர்க்கு ஆபரணத்தில் எண்ப
தென்றவாகமெல்லா மிடைந்துபோகும் பழியானநோய்
வந்தாலிப்படியேசெய்து பரிவாகவயித்தியத்தை பிறகு
செய்யே. 57

## வாதராசாங்கத்தயிலம்.

பிறவாதநெறிபெற்ற வயித்தியர்க்குப் பிலமானதயில மொன்றுமேசராசாங்கம் திறமானவாதராசாங்கஞ்செய்ய செகமெய்த்தசவுரிதுபலந்தானூறு, மறவாதுமுன்போல வேகிழாயம்வாங்கி வாகானமகாமேதை பலந்தானூறு, முறையாசாரணைவேர்பலந்தானூறு மூன்போலே கியாழ மிட்டு வாங்கிக்கொள்ளே. 58

கொள்ளடா சென்னகரைபலந்தானூறு கூசாமல் மூன்போலகியாழம்வாங்கு வின்ளடாநாருண்டின் வேப் பம்பட்டை விருதாகநூறுபலம் கியாழம்வாங்கு தள்ள டாகுறுந்தொட்டிமூலம்மூறு துடியாகமுன்போலே கியா ழம்வாங்கு கள்ளடாகியாயமெல்லா மொன்றுய்சசேர்த்து கருத்துடனேயின்னமொன்று கருதிக்கேளே. 59

கருதுவது மேனிச்சாறுபடிதானென்று கையான் சாறுபடிதாளிர்சாறுபடியொன்று சுருதிபெறுமூடக்கொத் தான் சாறுபடியொன்று சொந்தவேலிப்பருத்திச் சாறு படியொன்று பெருவாதமடக்கிச்சார் படியேயொன்று பேரான கியாழத்தில்கூடச்சேரு வருவதுதான் வெள் ளாட்டுக் கோமியமும்பாலும் வளர்பசுவின்பாலதுவும் வகைக்குநால்படியே. 60

படியானஅமுரியது படிநாலுங்கூட்டி பகர்வேப்பி னெண்ணை யுமெள்ளெண்ணெய்தானு மூடியான விளக் கெண்ணெய் தேங்காயெண்ணை முறையானபசுவினெய் யஞ்சுகூட்டி துடியானவகைமூன்றுபடியதாகத் தோண வேசேர்த்துப்பின்கந்தங்கேளு கெடியான அதிமதுரம் நறுக்குமூலங் கிளர்கோஷ்டமரபஞ்சள் மிளகுசுக்கே.

சுக்குடனேசாதிக்காய் கிராம்புயேலஞ் சொல்வெளிச் சிப் பிசினுடனே அரத்தைஅக்கிரு-மிக்கதொரு வசம் புடனேரேணுகம் பச்சைவெட்டி வேர்விலாமிச்சஞ் சீரகங்கச்சோலந் தக்கதொரு சந்தனமுஞ் செவ்வள்ளி யேலஞ் சட்டியுடனிந்துப்புசீனக்காரந்-தக்கதொரு வெடி யுப்பு சவுக்காரம்பூரந் தனித்தவகையொன்றுக்கு கழஞ்சு நாலே. 62

நாலானமருந் தெல்லாவரைக்கக்கேளு நல்லபழச் சாறுவிட்டு மைபோலாட்டிப்-பாலாவேபாகுபோற் கரைத்துக்கொண்டு பட்சமொன்று காய்ந்துமெழுகாகும்போது மாலானபூநீறு சாம்பிராணிகூடன் வடிகலயந்தன்னிலிட்டு வடித்துக்கொண்டு-கோலானவகைகழஞ்சி வீதம் போட்டு குருபூஜைசெய்திடுவாய் திறமாய்தானே. 63

திறமானசிதம்பரத்தைப் பூசித்தேதான்செய்ததொரு மருந்துதனைமெய்யிற்பூசி, மறவாமற் காசெடைதானுள்ளேகொண்டால் மண்டலத்தில்வாதமெல்லா மருண்டு போகு முறையானபத்தியந்தான் முருங்கைப்பிஞ்சுமுற்ற சிறுபயருடனே துவரைசுண்டை, திறமானநெய்பாலோ பயிரைவரால் கெளுத்தி நிசமான வெள்ளாட்டுகண்டமாமே. 64

கண்டதொரு செந்தூரஞ்சொல்லக்கேளு காசினியிலரப்பொடிதான்கழஞ்சிபத்து, நண்டானவீரமதுகழஞ்சிபத்து நலமானவெருக்கின்பால் விட்டரைத்து விண்டதொருமூன்றுநாள் கைவிடாமல்வீரமிட்டுமும் முறையாயாட்டித்தீரு, தண்டமிழ்சேர்குப்பியிலே வைத்துமூடி சாதகவாம்நெற்குழியிற் புதைத்துவையே. 65

வையப்பா மண்டலத்திற் செந்தூரந்தான் வளர் முருக்கம் பூப்போலச்சிவந்துபோகும், ஐயப்பாகண்டதொரு செந்தூரத்தைக் காற்பணமாய் பத்துநாள்திரி பலையிற்கூட்டி, நெய்யப்பா விட்டரைத்துக் கொள்ள வேணும் நிச்சயமாய்வாதமென்ற முடக்கத்திருன், செய்யப்பா தீவேண்டாமிதுசெந்தூரஞ் சேர்த்துநின்ற சூலையொடுகுன்மம்போமே. 66

## அஷ்டகுன்மவரலாறு.

குன்மம்வந்த காரணந்தானேதோவென்னில் குடிகெடுத்துவயிறெரிச்சல் கொண்டபாவம், நன்மையில்லா மனக்கடுபெருத்தபாவம் நல்லோரைமனம்நோகப் பழித்தபாவம் தன்னையில்லைபிறர் பசிக்கவுண்டபாவஞ் சண்டாளசத்துவமே செய்தபாவ, மிம்மையிலே யிப்பாவம் வந்துசுற்றி இதனாலேகுன்மமென வெடுத்தவாறே. 67

## கர்மநிவர்த்தி.

வாருனகுண்மது தீரவென்றால் வயித்திபனலாகாது கருமமிஞ்சும், வீரானகருமத்தைத் தீர்க்கச்சொல்வேன் வேலவநுக்கபிஷேகம்வெள்ளியிற்செய், நாருனதீர்த்தங்க ளாடச்சொல்லு அன்னமிடுதானமுதற் கோதானங்கள் வீருனவாலயத்திற் நெய்விளக்குமேற்று வேதியர்க்குச் சொர்னதானமிகுந்துசெய்யே. 68

## தாம்பிரச்செந்தூரலேகியம்.

செய்தபின்பு குன்மமென்றவகை யெல்லாந்தான் தீர்க்கவொரு மருந்துசொல்வேன் திறமாய்த்தேர்ந்து·தை வளையின்சாற்றாலே கெந்தகத்தையரைத்து சாதகமாய் மூன்றுதின மரைத்தபின்பு, மைபோலே மெழுகாகும் குகைபோல் பண்ணி மண்ணென்ற குகைக்குள்ளே வைத்தபின்பு, கையென்றசெம்பதனைத் தகடாய்தட்டி காஞ்சரையின் பழச்சாற்றிலூறப்போடே 69

போட்டுவைப்பாய் பட்சமொன்று சென்றுவாங்கி புகழ்சீனக்காரத்தை மேலேபூசி நாட்டமுடன் குகைதனிலேவைத்துமூடி நலமானசீலைமண்தானேசெய்து மூட்டுவாய்கெசபுடத்திலொரு புடமாய்த்தானே மூதண்டமாகியதுநீறிப்போகும், பூட்டுவா யந்நிடைக்குலிங்கங்கூட்டிப் புகழாகவரைத்ததனைபில்லைபிட்டே. 70

அரைப்பதுதா னெருக்கம்பாலதனாலாட்டி அப்பனேயோட்டில்வைத்துக் கெசபுடமாய்போடு, துரைக்குருவாஞ்செந்தூர மூருக்கம்பூப்போல்சொர்ன்னமென்ன விதற்கீடோகன்மமேது, அரைப்பணந்தான் திரிகடுகு தேனிற்கொள்ள வஞ்சாதகுன்மமெட்டும் வாயாதோடுங் கரப்பனொடுபெருவயிறு நீராம்பல்கேள் கதிகெட்ட மகேந்திரமுங்காணுதன்றே. 71

காணுமோவுதிரத்திலுள்ளவாய்வு கதித்தோடு மானந்த வாய்வுனோடு, வேணுமென்ற விஷபாகம் பிறநீர்க்கோவை வீக்கமொடுகவித்திருந்த விஷநீரெல்லாங், கோணுமேசெந்தூரங்கண்டபோதே கூட்டிலுள்ளநோய்

களெல்லாங் குடிபோம்பாரு, ஆணுவத்தாற்சொன்ன தடாவிந்தநூல்தான் ஆச்சரியஞ் சித்தருக்காயறைவேன் பாரே, 72

## குன்மத்திற்குலேகியம்.

பார்த்திட்டலேகியந்தா னென்றுகேளு பண்பான நாயுருவியுப்பும்வாழையுப்பும் நீர்த்திட்டதாழையுப்புந் தெங்கினுப்பும் நோானபேதியொடு சத்திச்சார மார்த் திட்டு நின்றதொருவீரம்பூர மகத்தான நவாச்சாரம்பூ நீரோடு, கார்த்திட்ட விந்துப்புங்வளையலுப்புங் கருவான வெள்ளுப்புஞ்சங்குநீரே. 73

நீறுடனேவகைக்குவொரு பலமாய்வாங்கி நிறை யான கந்தகமோ பலமோவொன்று, பேறுடனே திரிகடுகு பலந்தானென்று பேரானசாராயம் விட்டரைத்து, மாறு படதெருக்கம்பால் கள்ளிப்பாலு மக்களேவகைக்குளக் காய்வார்த்தரைத்து கூறுடனேநெய்யுழக்குந் தேனுழக் குங் கூட்டியே கொதிக்கவைக்கமெழுகுமாமே. 74

மெழுகெடுத்துப் பரணிதனிலடைத்துக் கொண்டு விசைக்குவொரு பணவிடைதான் தாம்பிரச்செந்தூர, மெழுகெடுத்த லேகியந்தானரைக்கழஞ்சு உத்தமனே ரெண்டுமொன்றுய் ரோகித்தே தான், மழுக்கெடுத்தகருக் கரையிற்கொள்வாகி லட்டகுன்மம் வாயுவெல்லாமகன்று போகுந்,தொழுதெடுத்தமண்டலந்தானரைத்தீற்றீருஞ்சுறுக் கடாலேகியமுந்தாம்பிரமும்பாரே, 75

## குட்டவரலாறு.

பாரிந்தப்படிசெய்யிற் குன்மந்தீரும் பாலாகும்நெய் யாகுஞ் சிறுபயறுமாகுங், காரிந்தவாமத்திலாயிபாதங் கருணையினல் சன்மாந்தரநோய்கள் தீரும், சேர்ந்தகுட்ட மோடுகுறைநோய்கள் வந்தசேதிகேள் மலராதவரும்பு கொய்தல், தாரிந்தக்சிவசெந்து வதைகள்செய்தல் தாய் தந்தைமனதுநொந்த துரோகந்தானே. 76

தானென்ற தெய்வவுருத்தனையழித்தல் சார்வான பெரியோர்கள் தமைப்பழித்தல், கானென்ற நந்தவனம் பூஞ்செடிகள்வெட்டல் கருமமடாசரீரத்திற் சுபோலே, பூனென்றவுடம்பெல்லாம் பொட்டுப்பொட்டாயுடன்வெளுத்துக்குறை நோயாயுதிரஞ்சிந்தும், வானென்ற கருமங்கள் தீர்ப்பதற்கு வகையொன்று சொல்வேன்கேள் நந்தவனப்வையே. 77

## கன்ம நிவர்த்தி.

வையடா செவ்வந்திமுளரிதானும் வாகானகிணறு குளஞ் சாலேசோலே, செய்யடாதன்னைப்போ லுருத்தானென்று தெய்வதலமதில் வைத்துச்சாத்தார்பூசை, செய்யடாசிவபூஜை விசேஷவோமஞ் செகந்தனிலே மண்டலந்தான் வேதியருக்கன்னஞ், செய்யடாநெய்விளக்கோராயிரந்தான் செயமாகச்செய்திடவே நிசமதாமே. 78

## அவிழ்தவகை.

நிசமாகக்கருமங்கள் நிவர்த்திசெய்து நிண்ணயமாய் முன்சொன்னதாளகமூஞ்சூதம், வசமான மேகராசாங்கத்தோடு மைந்தனேமூன்வைத்த தயிலமூழ்கு, தெசமான நாளிலே தீருந்தீருஞ் சிந்தையிலேகலக்கமதுசெய்ய வேண்டாம், விசமானவித்திலொரு தயிலமுன்னேசொன்னேன் வெகுசுறுக்குவிந்நோய்க்கு விருதுகட்டிக்கொள்ளே. 79

## வலிவரலாறு.

விருதான வலிஐந்துவந்ததேது மேதினியிலூர்வனமாம் பறவைபட்சி, யரிதானநாகத்தைக்கொன்றபாவமஞ்சுவகைவலியாச்சு அதிகமாச்சு, பெரிதானவலியுஞ்சுந்திராதப்பா பிரபலமாங்கருமங்கள் தீராவிட்டா, லுரிதான கருமங்கள் திர்க்கச்சொல்வே னுத்தமனே நாகமாஞ்சுபிரதிட்டைபண்ணே. 80

## கன்மநிவர்த்தி.

பிரதிட்டை சிவனுக்குதந்திக்கொன்று பெருத்தசிவதலந்தோரு மண்டலந்தான்பூஜை, யடைந்திட்டேனுயிரந்தானெய்விளக்கும் ஆயிரம் வேதியர்களுக்குமன்ன

தானம், நிறைந்திடவேகோதானம் வஸ்திரதானம் நிச்யசமாஞ் சிதம்பரமாமெக்கியநூறு, வுரைந்திடவே சிதம்பரத்தையெழுதிக்கட்டு வுத்தமனே வயித்தியத்துக்குருதிதானே. 81

## அவிழ்தவகை.

உறுதியா மெந்தெந்தவலிகட்கெல்லா முற்பனமாய் தயிலமொன்றுவுரைக்கிறேன்கேள், பொருதியாய் நரியெலும்பு நாயெலும்பும் பூனையத்தி முயலெலும்பு ரவியன்காற்குளம்பு மறுதியாங்கழுதையத்தி பன்றியீரலப் பனைமயிலீரல் கோழியீரல்-சுருதியா யாட்டெலும்பும் பூநாகந்தான் சொரியமனன்றமணற்றவளை கருங்காங்கைசிரசே. 82

சிரசாகுமுடும்போடு காமரூபி செம்போத்தின் தலையுடனே பச்சைப்பாம்பு, மாசோடும்புக்கோடு மூசுறு முட்டையப்பனே தண்டிறைச்சிளப்பியாகும், விரசாகுஞ் சேங்கொட்டை யாயிரக்காலட்டை வெண்புரசின் வித்துடனே யூர்க்குருவிமுட்டை பாசானபிராயம்வித்து பெருங்கைவித்தும் பரிவானவசம்பினொடுபன்றிநெய்யே. 83

நெய்யான வாவிநெய்யேரண்ணத்தெண்ணை நிசமாகமயிலெண்ணையாட்டி, னெய்யுமெய்யான வேப்பெண்ணை புங்கியெண்ணைவிருதானகுருந்தென்னை யிலுப்பையெண்ணை, கையானநல்லெண்ணை கொன்றைபுன்னை காட்டமணக்கெண்ணை தேங்காயெண்ணை, செய்யான சிவன்வேம்பும் வாலுழுவைத்தயிலஞ் சிறப்பான வெள்ளுள்ளித்தயிலஞ்சேரே. 84

சேர்த்திடுவாய் வகைக்கிரண்டு படியதாகச் சிறப்பாக மருந்தெல்லா மரைப்பலமாய்க்கொண்டு ஆர்ந்திடவே யிடித்தரைத்து மைபோலாக்கி யரிதானயெண்ணையிலே கரைத்துவிட்டு நீர்த்திடவே மூன்றுநாள் முத்தீயிட்டு நினைவாக மெழுகுபதமானபோதே கார்த்திடவே கணபதிக்கும் வயிரவர்க்குங் கருணைவரப்பூசித்து கடக்கவாயே, 85

வைத்ததொரு தைலந்தான்வலிகள் ராசாங்க மாருட்டமில்லையடா வச்சிரகாய-மெய்த்ததொரு வலிகள்வந்த நேரந்தன்னி லிட்டிடுவாய்பதைப்புகளிற் றெடுத்தொட்டு கைத்ததொருமூங்கில் விட்டுக்குழல்கொண்டு காதிலே விட்டடைத்து கண்ணிலஞ்சனம்-வைத்துந்தா னுள்ளுக் காசெடைதானீந்து-மார்பிலே படிந்தவுட னெழுந்திருக்கும். 86

வாருனவலிக்கெல்லா மஞ்சனந்தாளென்று வாய்ப் பாகச்சொல்லுகிறேன் வனமாய்க்கேளும், கூருனவிந்திரகோபம் பச்சைபாம்புங் கூர்மையுள்ள நன்மிளகு மகிழம்வித்தும் நீரானமக்கள்வித்து வகைகளெல்லா மரைத்து நிச்சயமாய் வெள்ளாட்டுப் பிச்சுநீர்படியும், பேருகவேயரைத்துப் பன்றிப்பித்துப் பெருங்கோழிப் பித்துடனவ் வீரத்தமாயே. 87

ஆமிந்த வகைகளெல்லா மரைத்துவெள்ளியதனி லொருமஞ்சாடி விட்டரைத்துக்கொண்டு, வோமிந்தமிள கதுபோற் குளிகைசெய்து வுத்தமனே நிழலுலர்த்தி வெற்றிலையின் சாற்றில் வாமிந்தப்படி யரைத்து யெள்ளிடை தான்கண்ணில் வந்திடவேவலிகளெந்தும் விட்டு வழிந்திடுமே போமிந்தவலிகளெந்து மண்டலந்தான்தயிலம் புனிதமால் கொண்டிடவேபோகும் வலிதானே. 88

வலிகளெல்லா முச்சாடனமாரணத்தை வாகாகச் செபஞ் செய்துவோமஞ்-சலியாமற்றங்கமென்றக் கட்டிற் கீறி சாதகமாய்சுத்திசெய்து தரித்தபின்பு பெலியதுதான் கோழியென்று தலையை சுற்றிப் பிசாசுபவுச்சாடனு ளென்று வெட்டிப்போடு, பலியானவலிக ளெல்லாமுன் னைக்கண்டால் பறக்குமடா வயித்தியனே பாருபாரே.

## பித்தம்வாலாறு.

பாரடா பித்தமென்ற கிரிச்சனந்தான் பதினெட்டு வகையாகப் பலித்ததேது, வூரடாவிருக்கின்ற பெரியோர் தம்மை யொருக்காலே பழித்ததினுல் வந்தபாவஞ், சீரடா பாராமல்தூஷணித்தால் சிவஸ்தலங்களதைப் பழித்தல்

சிவமேசெய்த லாடகோபமென்ற பரவத்தாலே யப்பனேபித்தமது சிரசின்மேலே. 90

மேலேறியகந்தனையெழும்பி மேகமென்ற புரவியது போலேயாச்சு, மாலேறிபுத்திக்குட் பிரமைதோன்றி மனம்விட்டுக்கூத்தாடி வெளியேயேகிக் காலேறிப்பசாசு போற்றறிந்ததென்ன காரண்டகோபமென்ற கருமத்தாலே-பால்போலு மனமுடைய பெரியோர்சாபம்பலித்த தடாபுத்திகெட்ட பரிசதாமே. 91

கர்மநிவர்த்தி.

பரிசானகர்மத்தைத் தீர்க்கவென்றால் பகருவேன் கோயில்குளம் பலதீர்த்தங்கள், தரிசானவபிஷேகம் பால் பழங்கள் சருக்கரைசந்தனக் குழம்புசாந்தம்பூமாலை அரிதானபரங்களுக்குமன்னதான மாசடியில் நூறுகுடம் நீரைவிட்டுப் பரிசானகோவுக்குப் புல்நீர்வைத்துப் பாரிலேபுதனேனென்புபத்துப்பத்தே. 92

பத்தாகவிப்படியேகுளிர்ச்சிசெய்து பஞ்சகும்பந்தாபித்துத்தியானஞ்செய்து, பித்தனுக்குநூறுகுடஞ்சிரசிற்செய்து, பிலமாகச் சுப்பிரமண்ணிய மெழுதிகட்டிச் சித்தாகசுப்பிரமண்ணியம் நூற்றெட்டாகச் செபித்து நீ மருந்துசெய்யிற்றீருங்கன்மங் கத்தாவின் பாதத்தை நம்பினோர்க்குக் கைகண்டமருந்தொன்று கருதிக்கேளே. 93

அவிழ்தவகை,

கேளடாமாட்டெலும்பு நாயின்மண்டை கிழமனிதாவெந்தவஸ்தி நீறுதன்னை, நாளடாதேசிப் பால் விட்டு மூன்று நாளரைத்துக் கெசமாம்புடத்தில் வைத்து வேளவனை யெரித்தசிவன் சொன்னமார்க்கம் வெந்தவஸ்தி நீறதனைத்தேசிப்பாலில், கேளடாசொல்லாதே கழஞ்சியொன்று கொடுத்திடுநீயுள்ளுக்குத் தினந்தான்பத்தே.

தயிலம்.

பத்துநாளிடுகவொரு தயிலஞ்சொல்வேன் பழச்சாறுபடிநாலு மூலைப்பாலுநாலு-மூத்தானகோகுலத்தின் பால்தாநாலு முறையானபசுவின் கோமியந்தானாலு,

சுத்துமோா முசுமுசுக்கைச்சாறுபடி நாலு சொல்லுகி றேன் கொடுப்பைபரசம்படிதானுலு, வித்துமேயதிமது ரங்கோஷ்டமேலம் விளங்கவே சீரகஞ் சந்தனமுங் கூட்டே. 95

கூட்டியேவகையொன்று பலமொன்ருகக் கோகுவ யிலேச்சாறு விட்டுமைபோலட்டி பூட்டியேநல்லெண்ணை படிதானுலு டிகட்டியேகாச்சி வடித்தெடுத்துவைத்துத் தாட்டிகமாய்த்தலையிலே குடோரியாடி சாதகமாய் நுாறு குடந்தண்ணீர்விட்டு வீட்டியேயிருத்திவைத்து மோறுஞ் சோறு வேணுமடாசீனிகறிவிளம்பினேமே. 96

விளப்பவே மண்டலத்திற் சொல்லக்கேளு வெறி யென்றபித்தமெல்லாம் விழலாய்ப்போச்சி, தளம்பவே யின்னமொரு மருந்துசொல்வேன் தாணமிர்தசருக்கரைக் குந்திருந்திருங், களங்கமறச்சொல்லிவிட்டேன் முந்நூற் றுள்ளே, கருமாந்தரநோய்திருங் காரணந்தானப்பா பளங்கநிந்தரசம்போலே பாருபாரு பகருவேன் சிரசில் நோய் கருமங்களே. 97

பீனிசமுதலிய நோய்வாலாறு.

பகருவேன் மண்டையிலே கரப்பான்கட்டும் பகாரிய பீனிசங்களிகணத்தோடு, நிகரில்லாவொரு தலைநோய் மண்டைக்குத்தும் நிசமாக வந்தகன்மம் நிசமாய்க்கேளு தகரவேகாயடித்த லிலைபறித்தல் தனிர்கொழுந்து தழை முறித்தல்பட்டை வெட்டல், நிகரில்லாப்பூப்பறித்தல் வேர்கொடிகள் வெட்டல் நினைவுகெட்டுச் சீவசெந்து தனையடித்தலாலே. 98

கர்மநிவர்த்தி.

அடித்தகன்மம் மண்டையிலே யிரணங்கொண்டு அரகரா நோய்பிகுந்த கருமந்திர-படித்துறைகள் முடிச் சரங்க ளெண்ணைக்காப்பு பணிமாறுங் காலத்திற் றூப தீபஞ்-சடைத்தலைக்கு மபிஷேகம் பாதாட்சைதண்ணீர் பந்தல்மடங்கள் சாவடிகள் சாலை, மூடித்ததொரு மண்ட பங்கள் தீர்த்தவாரசமுறையுடனே செய்திடவே மூண்ட கன்மம்போமே. 99

கன்மமென்ன தன்மமென்ன வென்றுயானால் காயத்தில் நோய்மிகுந்து சண்ணுஞ்சண்ணும், வன்மமென்ன வகையறிந்து கர்மந்தீர்ந்து வகையுடனே மருந்துசெய்யில் வயித்தியனுகும் நின்மூடனுனுக்காற் கன்மந்தீரான் நினைவுகெட்டு மருந்துசெய்யிற் பிணிதீராது-கன்மத்தை நிவர்த்திசெய்து மருந்துசெய்யில் கருத்துள்ள வயித்தியனுங் கருதிப்பாரே. 100

அவிழ்தவகை.

கருதுகின்றகொடிவேலி பலந்தானென்று கற்றுனழவேர்ப்பால் விட்டரைத்துக்கொண்டு, சுருதிபெறு நல்லெண்ணைபடியொன்றிற் கரைத்துச் சுகமாகமெழுகுபதந்தனில்வடித்து நிருதியென்று தலையிலிட்டு மூழ்கும்போதில், நெற்றியுடத்தவிடி மண்டைக்குத்திபருதிகண்ட பனிபோலோ பறக்கும்பாரு பண்பானதிரியென்று பகரக்கேளே. 101

கேளடாவரிதாரமெருக்கின்வேருங் கெடியான பழச்சாற்றிலாட்டிக்கொண்டு-வாளடா திரியாக்கிப் புகையைவாங்கில் மண்டையிடிபீனிசங்கள் கபாலமூலே, நாளடா கரப்பனது செவிநோயாலே நாடிவந்த நீர்களெல்லாம் நலமாய்த்திரும், வேளடா செவிநோய்க்குத் தயிலமொன்று விள்ளுகிறேன் பரிவாகவிரைந்துகேளே. 102

செவிநோய்க்குத் தயிலம்.

விரைந்தெருக்கின் வேரோடு முருங்கை நொச்சில் வெண்தோன்றிக்கிழங்கினுடன் துளசிப்பச்சை நிறைந்த குரு பாகலொருகருவிருயிஞ்சி நிகராக வகைக்குழக்குச்சாறுவாங்கு றெந்தனக்கு எண்ணெயொருபடியிற் கூட்டிச்சீராகமெழுகுபதந்தனில் வடித்து, சுரந்த செவிதனில் வார்த்துப் பஞ்சடைக்கில் செவிநொய் நீர்ப்பாச்சலது சுழன்றுபோமே. 103

கெற்பநோய் வரலாறு.

சுழலாமல் ஸ்திரீகளுக்குக் கெற்பநோய்தான் சூழ்ந்துவந்த கருமத்தைச் சொல்லக்கேளு அழலாலே

விந்துவதை யழித்தபாவ மஞ்சாமற்பாலகளைக் கொன்ற பாவங், குழவியிளம்பிஞ்சுபூப் பறித்தபாவங் கோவினங் கன்பருகும்பால் குடித்தபாவம், விலைவான விளம்பயிரை யழித்தபாவ மேதினியில் மலடான வித்தைதானே.

கர்மநிவர்த்தி.

விந்துதனை யழித்தகன்மந் தீரவென்றால் விள்ளுகி றேன் பாலகர்க்குச்சுங்குபாலும், நந்திபெருங்கணபதிக்கு வேமண்டலந்தா னலம்பெறுகெற்பனைகளுக்குங் குழந் தைகளுக் கன்னஞ், சுந்தரமாம் புருஷருக்குக்கன்ன தானஞ் சூல்பசுவுக்கன்னம் பாற்பசுவுக்குப்புல்சிந்தை பெறுந்தேவிக்குச் சொர்னகிள்ளை சிவபூஜை விஷ்ணு பூஜை செய்துகொள்ளே. 105

செய்திடுவாய் சாத்தாவுக் கிடுக்கும்பிள்ளை சேயிழை போலுருவமொன்று சிறுவர்க் கெல்லாம், நெய் பழமும் பொரிகடலைபயறு தேங்காய் நியமமுடன் சிவதலங்கள் தெரிசித்தேறல்-எய்துதர்மமித்தனையும் செய்யும் பேதி லெடுபட்டுவோடுமடா கருமமேது-மைவிழியாளுதரத் தில் வரும்நோய்தீர மார்க்கமொன்று சொல்லுகிறேன் மருந்துதானே. 106

அவிழ்தவகை.

மருந்தான மருந்தொன்றுமிதற்கீடல்ல மகத்தான சானகரணிபோலாந் திருந்துகின்றவுருவியுப்பு மெள்ளி னுப்புந் திருகுகள்ளியிலைக் கள்ளிசித்திரமூலங் குருத் தானசாரணையுந் தைவேளைநொச்சி குறிஞ்சானுமேனி யுடன் கொத்தானிஞ்சி-விருதான வீழியொடு தேவதாரம் வெண்ணொச்சிவேருடனே வெள்ளெருக்கின்வேரே.

நொச்சியொடு வகைவகைக்குச் சாறுபடியொன்று நுண்மையுள்ளவுப்பதுவும் பலங்கால்வீதம் கொச்சிமஞ் சள் குளவிந்தமோகங்காயங் குருவானப் விந்துப்புவளை யலுப்பு மெச்சுகின்ற யெவாட்சாரஞ் சத்திச்சாரம், வேணுமென்ற நவாச்சாரஞ் சீனக்கார முச்சிதமாஞ் சவுக்காரங்கரிய சீரகமுந்த சுக்கு மிளகுவசம்புமுவை யேலம். 108

ஏலமுடன்வால்மிலகு கடுகுகிராம்பு மித்தனையும் வகைவகைக்குப் பலங்கால்வீதஞ், சாலவிதையிளவறுப் பாய்ச் சூரணித்து சந்தான கரணியென்ற சாற்றிற்சேர்த் துச்-சீலமுள்ள கொம்மட்டிக்காய்ச் சாறுநாழிசிவதை பலம் வெள்ளுள்ளித்தயிலம்நாழி, கோலமுடன் பாக தனைக்கிண்டிக்கிண்டி குறுகியது வரும்போது கூறக் கேளே. 109

கூறுன வாவினெய்படியொன்றுவிட்டுக் குழம்பாக மெழுகுபதந்தன்னில்வாங்கி, யாறுகிறபதம்பார்த்து பீங் கானில்வைத்து அப்பனே யின்னமொரு மருந்துகேளு, மாதுகிறதோடையுடன் பிரமிசிவன் வேம்பு மைந்தனே யமிர்தவள்ளி வகைபடிதானென்று-மேறுகின்ற வாவி னெய்படியொன்றுவிட்டு இயல்பான குளவிந்தமொரு பலந்தான்போடே. 110

போட்டுடனே கிண்டியது மெழுகுபதமானாற் புக ழாகவே யெடுத்துபுகலக்கேளு நாட்டியேகுளிர்த்தநாள் மூன்றுநாள்கொண்டு நலமான லேகியத்தைச் சுண்டக் காய்நீத-மூட்டியே பத்துநாட் கொள்ளும்போது மூனை யானகெர்ப்பநோய் முறைமிட்டோடு-மூட்டுடனே மருந் துக்குப்பத்தியந்தான் மிளகுவுள்ளி கொறுக்காயுந்துவ ரைகோழி. 111

கோழியிடமிளகுநீர் சுத்தியாற்றிக் குடித்திடவே பால்கஞ்சி குளிர்ந்தசலமாகும் நாழியிலே புளிகாடி புகை யிலையுமுப்பும் நன்மைபெற நீக்கிடவே நளினமாகும், பாழியிலே போகாது பாலருண்டாம் பஞ்சிவிட்டதீயது போல நோய்கள்திரும்-வாழ்விலேயிதுவாழ்வு கெர்ப்ப நோய்க்கு மருந்திினிமேல் வேண்டாங்காண் வயித்தி யர்க்கே. 112

காமகேசரி குளிகை.

வயிற்றியரேயானுக்காற் சொல்லக்கேளு மாநிலத் திற் புருஷருக்குத் தாதுவிர்த்செயிற்றுவேன் சிறுபீனைக் காளிவித்தும், பார்வளருஞ் சூரிவித்தும் நீர்முள்ளிவித் தும்-செயித்திடவே முருங்கைவித்து மமுக்கருவித்துஞ்

செம்முள்ளிவித்துடனே நெஞ்சில்வித்து - முயித்தியவூ மத்தில்வித்தோரிதழின் வித்து முற்றகஞ்சாவித்துடனே யாவரையின் வித்தே. 113

வித்தென்றமுள்ளிவித்துஞ் சங்கின்வித்துமுசுமுசுக் கைவித்துடனே யனிச்சம்வித்து, மத்தென்ற வில்வவித் தும் நெல்லிவித்து மழகானவகத்திவித்து மத்திவித்து-முத்தென்றவரசின்வித்து மாலின்வித்து, மூன்னழிஞ் சில்வித்துடனே புரசின்வித்தும்-பத்தென்ற மூகட்டை வித்துஞ்சுண்டை திரிபலையும் பகர்ந்தகருவேல்வன்னி மருதுமாமே. 114

மருவானவாத்திவித்தும் நிலப்பனையின் கிழங்கும் வளமானமமுக்கருவேருங் கறுநிண்டி, பருவானசமுத்தி ராப்பழம்வாகைப் பிசினும் பரிவான முருக்கை பிசின் விளாம்பிசினிமாகும்-செருவானவேலின் பிசின் வேப்பம் பிசினியோடு சிறுவலவின்பிசினோடு சாதிக்காய் சாதிபத் திரி-தருவானகுரோசானி தேற்றான்வித்துந் தானமிர்த சருக்கரையும் சீனியாமே. 115

சீனியொடுகற்கண்டு குந்திரிக்கம் திராட்சிசிவன் வேம்புதென்னையுருவிவித்து-மானிலத்தி லிதுவெல்லாங் கொண்டுவந்து வகைகழஞ்சிவீதமடா அப்பிரகச்செந் தூர மேனமுடன்கழஞ்சிதை யெடுத்துக்கொண்டுஎன்ன சொல்வேன் காமப்பூகழஞ்சிகூட்டி, நானிலத்தில் மூந் திரியின் கனிச்சாற்றாலாட்டி நாற்பது நாழிகையரைத் துக் கட்லையென்னே. 116

என்னவேசுருட்டிநிழ லுலர்த்திக்கொண்டு இத மான வெள்ளியிடசிமிழில் வைத்து-கொன்னதோராவின் பால்தன்னிற் கொள்ளச் சுகமாகப்புகையிம் புளியுந் தள்ளு-அன்னமுடன் பால்கூட்டியமுதுகொள்ளு அனு போகமாயிரம்பேர் நாளொன்றுக்கு-முன்னைவரும் விந்து வுந்தான் சிரசிலேறு மூதண்டைக்குளிகையிது காம கேசரிசே. 117

சரியாகவிதற்கீடு வொன்றுமில்லை தாதுவிர்த்தியில் லாட்டாற் சடலாம்போச்சு, மரியாதவிந்துவது சிறசி லேற மகத்தான குளிகையது வளமாய்ப்பண்ணு-மரி தானமங்கையருமுவந்துகொண்டா லாயிரம்பேர் சென் ருலுமடங்காதப்பா-துரிதான ரசக்குளிகை போலேயா டுஞ் சொர்னம்போற்றே கமுமாந்துரை மதனவேளே.

வேளென்னவிதற்கீடோ தம்பனந்தா னென்ன வெகு சுறுக்குவெகு சுக்குகளினமெத்த-வாளென்னும் விழியுடைய மடவாரெல்லா மையல்கொண்டு பின்தொடர் வார் மகத்துவமெத்தவாளென்ற பெண்களைத்தானது போகிக்கிலடுத்துடனே விந்துவிழுமரிவைமனம்வேரும் தேளென்றவிந்துவது தம்பனமேயானுற்செகத்திலுள்ள மாதர்களுன்வசமென்பாரே. 119

## சுரநோய் வரலாறு.

பாரிலுள்ளமனிதருக்குச் சுரந்தான்வந்த பரிசது தான் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு நீரிலுள்ளவுயிர் கள்தமைரவி நெருப்பிலிட்டும் நிணமதனையறிந்திட்டும் நீர்கொடா விட்டும்பாரிலுள்ள மரங்கவதின் தோலுரித் தல் பசித்திருப்போர்க்கியாமலுண்ட பாவஞ்சூரியனை நினை யாத தோஷந்தோஷஞ் சூழ்ந்துதடா சுரதோஷ சூட்சந் தானே. 120

தானென்ற விததீசை சொல்லக்கேளு சார்வான வழிதோறுந் தண்ணீர்ப்பந்தல் வானென்ற மரம்வைத் தல் நந்தவனங்கள் வைத்தல் வஸ்திரதானங் குடைகள் மகிழ்செருப்புமீதில்-மானென்ற கந்தனுக்கு மபிஷேகங் கள் மகத்தான சூரியனமஸ்காரம் பொங்கல், ஊனென்ற வேதியருக்கிள நீர் சந்தனங்களுத்தமனே பால் பழங்கள் சருக்கரையுமீயே. 121

## அவிழ்தவகை.

ஈய்ந்தபின்பு சிதம்பரத்தை யெழுதிக்கட்டியிடுகாட்டி லிளநீரைக்கண் திறந்துவைத்து வாய்ந்தசிறந்தனக்கவிழ் தஞ்செய்யே யீந்தாலகலுமடா சுரமென்பதடங்கலுந்

தான் - காய்ந்தசுரசந்தானஞ்சன்னி ராசாங்கம் கருகக்கேள் கருப்பூரம் ரசங்கெந்திலிங்கந் - தோய்ந்தபச்சைநாபியுடனிர்விஷம் பாஷாணந்துலங்கு மரிதாரமொடுகெவுரிதொட்டி-பாய்ந்த பொரிகாரமொடு சீனக்காரம்பசுவின்கோராசனேயும் புழுகுகூட்டடே. 122

கூட்டியதோர் மருந்திதெல்லாங் குமரிச்சாற்றிற்கூசாமற் கிழிகட்டியவித்துக்கொண்டு, மூட்டுவாயிடைகழஞ்சி குழிக்கல்லில்விட்டு மூலைப்பாலிற் சாமமொன்றுமுன்னமாட்டி, சூட்டுக்கு வெய்யலிலே யுலரப்போட்டுச்சுகமாப்பின் செம்முள்ளிச் சாற்றுலாட்டி நாட்டியேசாமமொன்று வுலரப்போட்டு நலமான கரிசாலேச்சாற்றுலாட்டே. 123

சாற்றிஞலொரு சாமமுலரப்போட்டுத் தக்காளிச்சாற்றினலரைத்துருட்டிப்-போற்றியே யுண்டைபோலுளுந்தளவுருட்டிப் புதுச்சட்டிதனில்வைத்து நிழலுலர்த்தி, ஏற்றியே செம்பதனிலடைத்துக்கொண்டு யீசுவரிக்குப்பூஜைசெய்து இஞ்சிச்சாற்றில், மாற்றியே கொடுத்திடவே முரமுதலாவுள்ள மகத்தான சன்னியெலா மருண்டுபோமே. 124

அண்டத்தயிலம்.

மருளவே பத்தியத்தைச் சொல்லக்கேளுமைந்தனேயாட்டுப்பால் கஞ்சியாகுஞ், சுருளவெந்தக்கஞ்சியிலேயதிமதுரமே லஞ்சுக்கிட்டுக் காச்சியே கொள்ளச்சொல்லுஅருளானசுரக்குளிகை மெத்தவுண்டு ஆச்சரியமிதைப்போலே யாகாதப்பா இருளான சன்னிக்குத் தயிலமொன்று இயம்புவேன் கோழிமுட்டை அன்பதுதான்வேண்டே. 125

வேண்டியே செங்கருவை யெடுத்துக் கொண்டுவெள்ளுள்ளிப்பலம் பத்துத்தயிலம்வாங்கி, யாண்டதொருமுட்டையுட தயிலம்வாங்கி யப்பனே வேப்பெண்ணேயளந்துகூட்டி யேண்டதொரு பூநாகஞ்சன்னிநாயகமிதமாகக் குழித்தயிலமிறக்கிக்கொண்டு, பூண்டதொரு

தயிலமெல்லாமொன்றாய்விட்டுப் புனல்முருக்கைப் பட் டையுடன் சிவனார்வேம்பே. 126

வேம்புடனே யெருக்கின்வேர் மூன்றுங்கேளு விரு தானகுழித்தயில மிறக்கிக்கொண்டு, பாம்பினாடகண்ட மொடு வசம்புங்கேளு பலமொன்றோர் வகைக்கதிலே பொடித்துப்போட்டு-சோம்பாமற்காச்சியே மெழுகுபதந் தன்னிற் சுடவைத்துக்காசிடை தானுள்ளுக் கீந்து - ஏங் கியேபோகாமற் பதைப்புத்தோறு மிட்டிடவே விஷ மென்ற சன்னிவாதம். 127

வாதமொடுவலியஞ்சு மொக்கப்போச்சு - வையகத் திற் சன்னிவகை மாண்டுபோச்சு, ஏதறிவான் வயித்தி யன்தான் தயிலமொன்று மிட்டிடுவான் சன்னிவகை திருமோதான்-ஆதரவா மித்தயிலம் வைத்துக் கொண்டு ஆடலாம்வயித்தியத்துக்காசானாக, சூதறிந்துநாடி கண்டு கருமந்தீர்த்துச் சுருதியாற்செய்தவனே வயித்தியனாமே.

பாண்டுநோய் வரலாறு.

நாமொன்று சொல்லுகிறோம் பாண்டுவந்தநலமான கருமமது சொல்லக்கேளு, தாமென்னதாய்தந்தை மனம் நோகச்செய்தல் தரணிதளிலுள்ளவர்க்கும் வம்பே சொல்லலாமென்ற வுருப்பழித்தல் செவிசுவாச மற்றும் பொய் சொல்லலங்காரஞ்செய்தல் வேமென்ற கருமமது பித்த மேறி வெளுத்துதடா வெப்புமிஞ்சிக் கைகா லோய்வே. 129

கன்மநிவர்த்தி.

ஒப்வாலே யெப்பிளைப்பு மிருந்துதோன்றி, யுடம் பெங்கும் நீர்ந்துவிஷம் போலவீங்குங் காய்வாலேயெடு த்ததொரு நோய்தானப்பா கருமமாம் நோய்தீருங் கருத் தைக்கேளு தாயாரும் பிதாவுடனே தீர்த்தவாசஞ் சந் நிதியில்நெய்விளக்குசாஸ்திரவோரு - மாயிரம்பேர்வேதி யருக் கன்னதானம் மழகான கோதானமஞ்சுதானே.

## அவிழ்தவகை.

அஞ்சுதிங்கள் சோமவார மாறுமுகவற்கு மறுபத்து மூவருக்கு மமுதுபோசனம் நெஞ்சில் விசுவாசம வைத்துச் சிவனடியார்பாதம் நேசமாய்ப் பூசிக்க நிவர்த்தியாகும் - மஞ்சமறச்சொல்லி விட்டேன் மருந்துகேளு வளருகின்ற காந்தமது பலந்தான்வாங்கி - இஞ்சொலுடன் சுத்திசெய்து பிறகுகேளு எலுமிச்சம் பழச்சாற்றிலிரண்டுசாமம். 131

சாமமது ரெண்டரைத்து வில்லைசெய்து சாதகமாய் குதையில்வைத்து கெசபுடமாய்ப் போடு வாமமுடன் தீயாற்றியெடுத்துப்பின்பு வரிசையாய்பொரிகாரங் கழஞ்சியொன்று நாமென்றவரிதாரங் கழஞ்சியொன்று நலமானபொற்றலையின் சாற்றுலாட்டி சேமமுடன்பில்லை தட்டி யோட்டில்வைதது்த் திறமாகக்கெசபுடமே செய்திடாயே. 132

இட்டபின்பு யிதையெடுத்து வீரங்கால்கூட்டி யியல்பான பொற்றலையின் சாற்றுலாட்டி, திட்டமுடன்பில்லை செய்து புடத்திற்போடு செந்தூரம்பவளம்போற்சிவந்து காணும், பட்டிடவே கொடிவேலி பலந்தானென்று பரிவானநாகந்தான் பலமேவொன்று, சட்டமுடன் திரிகடுகுதிரிபலாதிதான் வகைக்குப்பலமொன்றுதாக்கிடாயே

தாக்கியே சூரணமாய் செய்துக்கொண்டு சம்பழத்தின்சாறுபடி கையானசாறு, தாக்கியேபடியொன்று கீழாநெல்லி வகைவகைக்குப் படியொன்று பேய்ப்புடலின் சாறு, தேக்கியேபடியொன்று முசுமுசுக்கைச்சாறு திறமானபடியொன்று நெல்லிச்சாறு, மாக்கியேபடி யொன்று மாவின்பாலொன்று மரகராசட்டியிலே விட்டுக்காச்சே.

காச்சியே தாவியிடுசூரணத்தைக் கனவிலைமெழுகு பதங்கண்டபோதே, யாச்சியமாம் பசுவிநெய்யரைப்படி தான்வாரு அழகானதேநதிலே படிகால்வாரு, வாச்சுதே பீங்கானில் வழித்துவைத்து மக்களே கழஞ்சியொன்

றெடுத்துக்கொண்டு, பாச்சியேசெந்தூரம் பணயிடை தான்வைத்துப் பாங்காக நாளொன்றுக் கிருநேரங் கொள்ளே. 135

நேரமொருமண்டலந்தான் புளியாகாது நெய்யுற்ற மீனாகாதுப்பாகாது, காரமுள்ள புகயிலையுங்கஞ்சாவாகா காதலியாராசைதனைக் கடக்கத்தள்ளி, வாரமுள்ளமோர் காச்சி முருங்கைசிறுகீரை வளமான நெய்த்தொலியுஞ் சுருமீனோடு, தாரமுள்ளமிளகுள்ளி கறிகூட்டித்தின்று சத்துருவாம் பாண்டுவகை தவறிப்போச்சே. 136

தவறிப்போம்பித்தமுடன் காமாலைசோகை க்ஷயங் காசம் விஷபாகஞ்சரசகுன்மம்வாய்வு, மவறிப்போம்வாத மூடனஞ்சுவலிகுட்ட மஞ்சுவகைப்பாண்டதுவு மஞ்சும் பாரு, துவறிப்பொந்தயிலமொன்றுசொல்லக்கேளு சுக மான கொடிவேலி பலந்தானென்று, தவறிப்போம் பசு வின்பாலதனாலாட்டி நல்லதிரிபலவகைக்கோர் பலமாய் வாங்கே. 137

வாங்கியே மூன்பாலால் மைபோலாட்டி மைந்தனே பசுவிநெய் நாழிவிட்டு, ஆங்கியே மெழுகுபதமான வாறே யழகாகவடித்துடனே மூழ்குவாய்நீ, பாங்கியசய மூன்று நாள் முறையாய்மூழ்கு பாண்டுவகை வெளுப் பெல்லாம் பறந்துபோச்சு, ஓங்கியே தாதுவெல்லாம் விர்த்திப்பாச்சு வுலகத்திலுள்ளவருக்குறுதிதானே. 138

கிராணிநோய் வரலாறு.

உறுதியாங்கிராணிவகை வந்ததேது வுலகத்திலு யிர்வதைகளுளைத் தின்னல், பொறுமையுள்ள மங்கை யறைக்கற்பழித்தல் புண்ணியமழித்தல் பூமரங்களழித்து, மறுதியாய் தழைமூறித்தும் நீரில்மலம்விட்டுமன்னமதை யிறைத்ததினாளணுகுந்தோஷ, மிறுதியாமித்தோஷம், நீங்குஞ்செய்கை யியம்புவேநாறுசெடியலரிவையே. 139

கன்னி நிவர்த்தி.

வையடா பால்குடந்தானாறு வாங்கி வாகாகச்சிவ னுக்கபிஷேகஞ்செய், மெய்யடாதாம்பூலமாயிரம் வேதி

யர்க்கு வெண்ணெயடா பாக்களவு கஸ்தூரிபாலகர்க்குச் செய்யடாவிப்படியே செய்தாயாகில் தீருமடா சென்மத் திற் செய்தபாவம், பொய்யடா வென்றெண்ணி விடுவா யாகில் புந்தியிலே வந்தநோய் போகாவாவே. 140

அவிழ்தவகை.

வாரானகிராணிக்கு மருந்துகேளு வையகத்தில் நோயாளி மயங்கவேண்டாங், கூறுனகெந்தியொன்று மரப்பொடிதான் மூன்றுங் குருவான லிங்கமொன்று காந்தமைந்து, வீறுனநாகமொன்று மனேசிலைமூன்று மெய்பாகத் தாழைவேர்ப்பாலாலாட்டி, நீறுகக்கெசபுட மாய் மூன்றுசெய்தால் நின்மலமாய் நீறிப்போமெடுத் துக்கொண்டே. 141

கொண்டபின்பு திரிபலையுமுத்தக்காசுங் குந்திரிக் கந்திறிகடுகுங் கோஷ்டஞ்சீரகமுங், கண்டதோர்ரதி மதுரஞ்சாதிக்காயுங் கஞ்சாவும் பத்திரியுங் கிராம்பு யேலம், விண்டதோர் வெட்பாலை அபின்தேவதாரம் விசையான கூகைநீறும் வில்வப்பிஞ்சும், நண்டான பருத்திவிரை யத்திப்பிஞ்சும் நாகலவிதைமாம் பருப்பும் புவிதைமேற்றேடே. 142

தோடான மாதளையின்பிஞ்சினேடு சொல்லுகின்ற பொன்முசுட்டைவேர் விளாம்பிசினும், பூடானவதி விடையமிலவின் பிசின்பிஞ்சும் புகழான நறுநிண்டி நிலப்பனையின் கிழங்கும், காடானவாவாரை வித்தினேடு கஞ்சாவின் வித்துடனே கற்கடகச்சிங்கி, கூடான கட விரைச்சி பெருமாத்தின்பட்டை குளவிந்தமஞ்சளொடு கூட்டுவகைகழஞ்சே. 143

கழஞ்சான மருந்தெல்லா மிளவறுப்பாய் வறுத்து கட்டாகச்சூரணித்துக் கடகவைத்து, இளங்கஞ்சாசாறு நாழி யாட்டின்பால்நாழி யெருமையுடதயிர்நாழி விட் டுக்காச்சி, இளஞ்சமிதொரு சூரணத்தைப் பாகிற்சேர்த்து விட்டதிலே யெள்ளெண்ணெ படியரையுமாகக் குழஞ்ச தொருமெழுகு பதமாகவாங்கிக் கூறுன லேகியத்தைக் கழஞ்சியுள்ளே. 144

அள்ளியேலேகியத்திற் பணவிடைசெந்தூர மைந் நான்கு நாள்கொள்ளக் கிராணியதிசாரந், துள்ளிவிழு மிரத்தமுட நீரின்பாசசல் துன்னிவிடு மூறுப்புடனே மூலச்சூடு, முன்னிரைச்சல் வாய்வுடனே பொருமல் செரியாமையோ கோராநீர்விஷங்கள் மூறிந்துபோகும், கொள்ளியென்ற கடுப்பல்லா மெங்கேபோச்சு கொப் பளித்த வலிபோச்சு கூர்மைபாரே. 145

சிரநோய்முதலிய கன்மவரலாறு.

கூர்மையுள்ள தந்தமொடு நாக்குங்கன்னங் கொப் பளித்த நோய்விதனங்குலுங்கும்பல்லும், நீர்மையுள்ள கண்ணேயுங் கன்னப்புத்தம் நிறைந்தகன்ன விப்புருதி பக்கச்சூலே, பாரமந்தச் சூலேயொடு பலலரணே பற்குத்து பகருந்தமானமொடு சிங்கரோகம், போர்மைரிள்ள தந் தக்கரை குறும்பி கெந்தகம் பொல்லாது யிதுவந்தால் ரோபசித்துப்சே. சிரசூபரோபச்சே 146

போச்சென்ற விடத்தில்வருங் கருமமெது பொய் வசனங்கோபமிஞ்சிப் பிறரைவைதல், சூட்சமுள்ள பேச்சுகளேப்பிறருக்கீதல் சொல்மறுத்தல் தூஷணித்த விடும்புபேசல், காச்சுகின்ற நஞ்சுகளே மனிதர்க்கீதல் கருமமடாவாயில்வந்து கட்டும்பாரு, நாசமென்ற கரும மது நிவர்த்திசெய்ய நாட்டுசிவதோத்திரந்தா னுற்பது நாளே. 147

கர்ம நிவர்த்தி.

நாற்பதுநாள் சிவன்கோயிலிங்கப் பிரதட்சணம் நாக்குருசியானபண்டம் நல்லோர்க்கீதல், காற்பதுபோல் பலரையுமே கருதிக்கொள்ளல் கணபதிக்குப் பொரியுண் டை கடலேபொரிதேங்காய், மாப்பிரியமாய்ப்படைத்து மருந்துசெய்யில் மருளானநோய்களெல்லா மருண்டு போகுந், திர்ப்பதற்குமருந்தொன்று புகலக்கேளு செப்பு வேன் தளர்ந்தபல்லேப் பிடுங்கிப்போடே. 148

அவிழ்த வகை.

போட்டபின்பு யெருக்கின்பால் குத்துக்குத்துப் புழுவிருந்தால் செத்துப்போம் பிறகுகேளு, மூட்டிய

தோரெயிறுதனிற் றடிப்புத்தோன்றில் மூதிர்ந்த வெள் ளிக்கம்பிதனை வெதுப்பித்தேய்த்துக், கேட்டபின்புமிளகு சுக்கு வோமமூன்றுங் கிருபையுடன் வறுத்துடனே பொடித்துத்தேய்த்துச், சூட்டபின்பு நாவற் ரூல்போட் டுக்காச்சிச் சுகமாகக்கொப்பளிக்க வீக்கம்போமே. 149

வீக்கமுடனெ யீறுதனிற் புண்ணதாகி வெகுகடுப் பும் பல்கூச்சமிருந்ததானு, லாக்குமுள்ளங்கத்திரிக்கம் புகையைக்காட்டி யாலமசுமத்தியித்திப் படையிட்டுதூக்க, மாவகைவகைக்கோர் பலமே தூக்கித் தூயசலம் விட்டு நன்ருய்சுருக்கிக் காய்ச்சி, தாக்கிநீயெட்டி லொன்ருய் வடித்துக்கொண்டு சாதகமாயெள்ளெண்ணை படிதான் வாரே. 150

படியான மெழுகுபதந்தன்னில்வாங்கிப் பாங்காகக் கொப்பளிக்கப் பல்நோய்தீருங், கொடிதாகும் நாக்கில் வருஞ் சிங்குணவரோகங் குடிப்போகமருந்தொன்றுகூறக் கேளு, நெடிதானவழுக்கருவேர் சுக்குமஞ்சள் நேரான வசம்புடனே நிறுத்துக்கொண்டு, சுடவறுத்துப் பொடி யாக்கிநாவிற்றூவி சுணையறவே தேய்த்திடவே சுகமாம் பாரே. 151

சுகமானயெண்ணையொன்று சொல்லக்கேளு சொல் லுவேன் கருவேலின்பட்டைபலம்பத்து, மூகமானமருத மரப்பட்டைபலம்பத்து மூகநதகிரிபுரமெரித்தான் பலம் பத்தாகுஞ், செகமானகுமிழம்வேர் பலம்பத்தாகுந் திற மான வெறுக்கின்வேர் பலம்பத்தாகு, மகமான மதுக் காரை பலம்பத்தாகும் மத்தியுடபட்டையது பலந்தா னென்றே. 152

வங்கச் செந்தூரம்.

ஒன்ருன கருங்காலிப்பட்டைபலமொன்று முருவி யதுபலமொன்று கடுக்காயொன்று, நன்ருகவிதையெல் லாமிடித்துப்போட்டு நல்லதண்ணீர் தூணிவிட்டெட் டொன்ருய்க்காய்ச்சிக், கொன்றிடா நல்லெண்ணை யிரு நாழிவிட்டு குணமதுரமேலமந்திஷ்டி வெள்ளிலோத்தி ரம், குன்ருதசுக்கோமம் வகைக்குநாற்கழஞ்சி குறிப்பாக வரைத்திட்டு குறுக்கக்காச்சே. 153

காச்சதிலே மூன்றுநாளூரச்செய்து கருகாமல் மெழுகுபதந்தனில்வடித்து, பாச்சியேவாயில் விட்டுக் கொப்பளித்துப் பலகாலுமூட்டிடவே வாயில்வந்தநோயு மாச்சுதே நாக்கில்வந்தநோய்களாறு மடவாகத்திருப்பல் லசைவுதிரு, மேச்சுதேன்ற நோய்களெல்லா மொக்கப் போச்சு இருகன்னந்தன்னில்வரும் நோய் கியம்பக் கேளே. 154

இயம்பக்கேளிருகழஞ்சி லவந்கந்தானு மிட்டுருக் கோர்சட்டியிலவ்விடையேசூதம், நயம்பெறவே தொந் தித்துப் பலமொன்றேமம் நலமாகத்தூவியே வறுப் பாய்சாமந், தயங்காமல் நாயுருவிவந்ததாகத் தானறுக் கிக்கிண்டியே சாமமொன்று, சயம்பதொன்று மருதந் தோலிடித்துத்தூவி சுருதியால்சாமமொன்று வறுத்தி டாயே. 155

வறுத்திடவே பற்பமதாமதனைவாங்கி வளமான வரி தாரம்பூரப்ரெண்டும், நிருத்திதுநீசமணிடையாய்க் கூட் டிச்சேர்த்து நிலையான சம்பீரச்சாற்ருலாட்டி, யொறுத் திடவேபில்லைதட்டி ரவியிற்காய்ந்தா லுறுநியாமோட் டில்வைத்து மேலோடுமூடி, செறுத்திடவே சீலைசெய்து கெசபுடமேதீர்ந்து தியாறியெடுத்திடவே சிவக்கும்பாரே.

சிவக்கவின்னஞ்சொல்லுகிறேன் தகரைச்சாற்றில் திறமாகவறைத்துவில்லைமூன்போற்றீரு, பவக்குறைகள் தீருமடாமூன்றுபுடம்போடு பண்பானசிவபூசை பண்ணி யேதா, லுவப்பானபணவிடைதா னுள்ளேகொள்ளு வொருநாளைக்கிருநேர மூறைத்துத்தினனு, துவர்ப்பான புகயிலையும் புளியுமாகா சூழ்கின்றமீனிறைச்சி நீக்கச் சொல்லே. 157

சொல்லுவது மண்டலந்தான் சந்தனுதிற் சுருக் கான தயிலம்வைத்து முழுகச்சொல்லு, மல்லுவது குழப்பொன்று சொல்லக்கேளுமதிகவெள்ளைக் குந்திரிக்க மெண்ணையிலேதூவி, மல்லுவதுவகைக்கொண்டுதேய்க்க

வெண்ணெ வழித்துநீயொருபலந்தான் மெழுகைவாங்கி சொல்லுவது பசசையொடு சூடன் கூட்டித் துகைக் கிரண்டுவகைக்கு மறைப்பலமாந்தாக்கே. 158

ஆக்கிரண்டுபொடியதுவுந் தூவிதூவி யரைத்திடு வாய் சாமமொன்றுதேனைவிட்டு, தாக்கியேபுங்கப்பால் சாமமொன்று சாந்தகமாயரைத்துஒரு சிமிழில்வைத்து, நோக்கியே சீலையிலேயூட்டிப்போடு நுணுக்கமடா கன்னத்தில்வருமநோய்க ளெல்லாம், பாக்கியமாம் பகையொன்று சொல்லக்கேளு படர்சாதிலிங்கமுடன் தாளமுஞ்சூடன். 159

சூடனெடுதுரிசிதுத்தம் நீலங்கூட்டிற் சுக்கோமம் வகைக்கழஞ்சி பெருக்கின்பாலால், நாடியேமைபோலே யாட்டிக்கொண்டு நல்லபழஞ்சீலையிலே யூட்டிக்கொண்டு, வாடவேநிழலுலர்த்தா யுலர்த்திக்கொண்டு வளமான திரிபோலே யுருட்டிப்போடு, சேடானதீக்கொளுத்திப் புண்ணிற்காட்டிச் சென்றபின்பு குழப்பதென்ற சீலை போடே. 160

சீலையதுபோட்டிடவே சிவந்துபோகுஞ் சீழ்சலங்க ளொடுவுடனேபுரையுந்தீரு, மாலயமாய் நோய்களெல்லா மகன்றுபோகு மரிதானமருந்திது தானறிந்து பாரு, வாலையுடபூஜைபப்பா செய்யவேணும் வயித்தியராமிருந் தவருக்கு வயிரவனும்வேணு, மேலிட்டபூநீறு செய்ய வேணு முறுதியாஞ்செந்தூர முண்மைதானே. 161

கரப்பன் முதலிய நோய்வரலாறு.

உன்மையென்ற காப்பனெடுவண்டு கடிகுட்டமூலகி லுள்ளோர்க்கிதுவந்த வுண்மைகேளு, தண்மையெனற தில்லாமலுதாசினங்கள் பேசல் சற்குருவைதூஷணித்த சண்டாளத்தால், வண்மையென்றவழியிலே முள்ளிட்டு வைத்தல் மரந்தழைகள் பூவுதிரவடித்தபாவம், பெண் மயிலேவண்டுகடி விஷமுஞசேர்த்து பிலத்ததொறிகுட்ட மது பிலத்தவாரே. 162

வாருன நீர்விஷப்போல்வந்ததோஷ மாற்றவொரு நிவர்த்திசொல்வேன் மருவிக்கேளு, கூருனகணபதிக்கு நெற்பொரியுமவலுங் கொட்டையென்ற தேங்காய்தான் பத்து நூறு வீருனயிளநீரும் பத்துநூறுவெள்ளியென்ற கிழமையிலே பழந்தானூறு, சாருனவிளநீரில் முப்பழமும்பிசைந்து சண்முகனர் தமையனுக் கபிஷேகம் செய்யே. 163

செய்தபின்புதேங்கையை யெடுத்துச்சூரைசிதறவே யுடைத்திடுவா யாயிரந்தான், கொய்தமலர் சிரசுதனிற் பொரியுங்கொட்டி கூட்டியெல்லாம் வாரியே கொள்ளை யென்று, பையல்களுக்கீந்தாக்காற் பாவந்தீரும் பரிவாக தூபமுடன் தீபங்காட்டு, எய்ததொரு கருமத்தை நிவர்த்திசெய்தா லிடுமருந்துசொல்லுகிறே னிதமாய்க்கேளே.

அவிழ்தவகை.

இதமானநிலவாகை சிவனர்வேம்பு மியலாடா தோடையெனற மூலியோடு, பதமானசெருப்படையும் விழுதிநீலி பாரிலுள்ளவெள்ளனுகாந்தைமேனி, குதமானமூளக்கொழுசிவேரினேடு கூட்டுகிறதரையொன்று பலமொன்ருக, விதமாகசூரணித்துக் கார்கேலோடு மிக்ககருஞ்சீரகமும் புகையொன்றுமே. 165

ஒன்ருகச்சூரணித்துத்தேனிற்கிண்டி யொருபோது பாக்களவா யிருநேரங்கொள், நன்ருகப்பத்துநாள் தின்னும்போது நலமாகும்வண்டுகடி பலவிஷமுந்தீரும், பன்ருனபத்தியமாய்க் கொள்ளவேணும் பார்முருங்கை யிலைக்காயும் பத்தியமாய்க்கொள்ள, வென்றதொரு கரப்பன்வகை பதினெட்டுக்கும் வெள்ளெருக்கின் வேர் பொடியிற்சீனிகூட்டே. 166

கூட்டியேபத்துநாள் கொள்ளுப்போதுகுளகுளத்த நீரசதங்கள் புழுக்கள்புண்கள், தாட்டிகமாய் தீருமடா வெண்ணையொன்று சாதகமாச் சொல்லுகிறேன் சார்ந்து கேளு, மூட்டியே முருக்கம்பூ வெருக்கின்பூவு முத்தெருக்

கின் செவியுடனே கார்த்திகையின் கிழங்கும், நாட்டியே வகைக்குவொரு கழஞ்சிவாங்கி நல்நெய்யரைப்படியில் நலமாய்க்காச்சே. 167

காச்சியே வந்தபதங்கண்டத்தின்கீழ் கனமாகயிட்டு வைத்துசாயங்கால, மாச்சியேயரைப்பிட்டு வெந்நீர் விட்டு அழகாகக்குளித்துவிடு அஞ்சுநாளில், போச்சிதே கரப்பனென்ற விஷநீரெல்லாம் புலவருக்குஇம்மருந்து புகலப்போமோ, வாச்சுதே முந்நாறுஞ் சித்தர்க்காகும் வயித்தியர்க்கே வுரைத்ததிந்த மார்க்கந்தானே. 168

பிளவைமுதலிய நோய்வாலாறு.

மார்க்கமென்ற பிளவையொடுகண்டமாலை மார்பி லெழுமானியொடு கழலைப்புத்து, தீர்க்கவொருவயித்தி யந்தா னுலகிலுண்டோ செப்பக்கேளிதுகள் வந்தசெய் கைதன்னை மூர்க்கமுடனுண்டையிட்டுவெடிதான்வைத்து முனையான சரங்களெய்து முண்டைவில்லாற்றீக்கமுடன் கவனெறிந்துங் கல்லெறிந்துஞ் சிவயோகிதனைச் சினந் துஞ் சிவசெந்துவதையே. 169

வகையான கருமத்தால் வந்தபாவம் வளருமடா அங்கங்கேதிரண்டுகட்டி, குதையான புழுக்கடைந்துஞ் சலங்கள்கட்டி கொடியநிணம் வீக்கமிஞ்சி குத்துங்குத் துஞ், சதையான தனத்தில்வந்த கருமநீங்கச் சாற்று கிறேன் வயித்தியரேதயவாய்க்கேளு, மதயானைபோலே வந்தகருமந்தானே மகத்தான பாவமடா மருவிக்காணே.

கன்ம நிவர்த்தி.

மருவியதோர் கருமத்தைத்தீர்க்கச்சொல்வேன் மயா னத்திலாடு பன்றிகோழிமூன்று, முருவியேமயான ருத் திரகாளி யுருவானமாவதனுலுருவச்செய்து, கருவான பட்டுவஸ்திரஞ் சாத்திப்புஷ்பஞ் சாம்பிராணிதூபமுடன் தீபங்காட்டி, திருவான பானையைந்து பால்பொங்கல் நைவேத்தியந் தியானிப்பாயிக்குறுதி சிறந்துவையே.

வையப்பாமுட்டையொடு வஸ்துவான் மதுக்குடந் தானிரண்டுவைத்து மாங்கிசத்திஞேடு, செய்யப்பா முப்

பெலியுங்கொடுத்துத்திரு சிதம்பரத்தைத் தியானித்து திருநீறுபூசி, கையப்பாகோதான மன்னதானங் கருணை யுடன்சிவாலயங்கள்கண்டுசேவி, மெய்யப்பா சொல்லு கிறேன் திருங்கன்மம் வியாதக்கு மருந்தினுட விவரங் கேளே. 172

அவிழ்தவகை.

கேளென்றசேதியென்ன கற்பூரணந்தான் கிருபை யுள்ள வெருக்கின்பால் விட்டரைத்துக், கூளென்ற மை போலே மாட்டிக்கொண்டு கொடியதோர் பிளவையிலே பூசிக்கொண்டு, வேளென்ற குதிரைலத்திக் கனப்புகைப் போட்டு மிகுந்தபுகைபிடித்தவுடன் புழுக்கள் வீழும், நாளென்ற வேப்பந்தோல் கியாழஞ்செய்து நலமாகப் புண்ணில்விட்டு கழுவிப்போடே. 173

போட்டபின்பு கர்ப்பூரக் குழம்புபூசு புகழாக மறு நாளுங் கழுவிப்போடு, ஆட்டபின்பு சிவக்குமட்டும் போடப்பட்டு அழகாகச்செய் துவரிலாரிப்போகுங், கேட்டபின்பு வுள்ளுக்கோர் மருந்துசொல்வேன் கெந்த கந்தான் பலமைந்துசுத்திசெய்து, நாட்டபின்பு வெண் கருநீர்விட்டரைத்து நலமான ஓட்டில்வைத்துச் சீலை செய்யே. 174

கெந்தபற்பம்.

சீலைசெய்து மண்ணல்மறைவிற்புடத்தைப்போடு செய மாகவிப்படியொன்று புடம்போட்டு, ஆலயமாம் வில் வரசம்விட்டரைத்து அப்பனே குக்குடந்தான்வெளியிற் போடு, வாலையாங்கெந்தகந்தா னீறிப்போகும் வளமான சருக்கரையிற்றேனிற்கொள்ளச், சூலையென்றகழலையொடு பிளவைகட்டுஞ் சூழ்ந்திருந்த வியாதியெல்லாஞ் சுழன்று போமே. 175

சுழன்றுதடா லிங்கப்புற்றும் யோனிப்புற்றுஞ்சொல் மாபிலாணியொடு கண்டமாலை, தழன்றுடலிற்றிரண்டு வந்த வியாதியெல்லாந்தான் கெட்டோமென்றுநீர் வற் றிப்போகு, மூழன்றுநின்ற புழுக்களெல்லா முருண்டு போகு,மொருநாளும்வாராது வுடல்வச்சிரகாய மழன்ற

கெந்திபற்பமிது கொள்ளும்போதி லன்சிறுபயனுடனே யாவின்பாலே. 175

பாலாகுந்துாதளங்காய் முருங்கைக்காயாம் பச்சை மீனிறைச்சிதலைப் பார்க்கலாகா, நாலாகும்நாற்பதுநாள் கொண்டபின்பு நல்லசந்தனுநிவைத்து முழுகச்சொல்லு மேலானவிழிமடவா ராசையாகாவிட்டுவித நூறுநாள் மேய்த்தொடாதே. காலானநோய்தீர்த்த பண்டிதர்க்குக் கனகதானங்கொடுத்து கருதிக்கொள்ளே. 177

கண்ணேய் வரலாறு.

கருதியதோர் கண்ணில்வந்த வியாதிகேளுகாரணந் தான் சொல்லுகிறேன் கட்டாய்கேளு, வெருதியென்ற மாதர்களையுற்றுப்பார்த்து வுடனேங்கிமோகமுற்ற வுடற் பாவந்நான், சதிருடனேசுருக்கண்டுவழித்ததாலுஞ்சத்தி தோஷத்தாலுந் தெய்வத்தாலும், விறுதுடனே பலவுயி ரைக்கொல்லக்கண்டுவிலக்காதே பார்த்திருந்தவீறினுலே.

வீருன பலபாவஞ் செய்கையாலு மெய்யதனைப் பொய்யென்ற வீம்பினுலும், வேருகக்பிறர்க்கிடுக்கண் செய்ததாலும் மிக்கதொரு சிவாலயங்கள் விரும்பாத தாலும், கூருனதெய்வத்தையிகழ்ந்தலாலுங் கூர்விழியில் நேர்விளங்குஞ்சலந்தானப்பா, வாருகதொண்ணூற்ரூறு வியாதிவரலாறு மதிகர்மங்கருமமெென வறிந்துசொல்லே.

கன்ம நிவர்த்தி.

சொல்வதென்ன கருமம்வந்து தொடர்ந்ததானுற் சூத்திரமாந் தானதர்மம் செய்யவேணுஞ், சொல்வ தென்னகோவில் குளந்தீர்த்தவாசஞ் சிவனேடுபஞ்சார்த் தாள் தெரிசனமாம்பூஜை, வெல்வதென்ன கோயில்குளங் கட்டவேணும் வேதியர்க்குத்தானதர்ம மிகவுஞ்செய் தல், கொல்வதென்றுஞ் செய்யாதே யிரப்போர்க்கீதல் குருபாகந்தனைபணிதல் கொள்கையாமே. 180

ஆமிந்தவுலகத்தி லிருக்கும்போதி லளவற்றகரும மடா ஆர்தான்வெல்வார், தாமிந்தகருமமொன்று மணி காதப்பா சார்வானசிவயோகி தவத்தினுலே, வரமிந்த

தேவிசிவபூஜையாலே மகத்தான கருமமென்ற குளிகை யாலே, யோமிந்தப் பெரியோர்களானவாறு முகத்துள் ளோர்க்குற்றதர்மந்தானே. 181

தர்மந்துசெய்வதற்குக் கசந்தாயனுல்சண்டாளபாவம் வந்துசபிக்கும்பாரு, வர்மமென்றகாசமது கண்ணில் வந்து மருளாக விருவிழியை மறைத்துக்கொள்ளுங், காமமென்றகாசமது கண்ணில்வந்து மருளாகவிருவிழி யை மறைத்துக்கொள்ளுங், கர்மமென்ற காசநீர் முதலா யுள்ள கருமாதரநோய்க்கவிழ்தங் கருதிக்கேளு, நிர்மல மாமிரும்பீயங்காந்தமீய மிரண்டுடனே கெந்தியரிதாரம் வீமே. 182

அவிழ்தவகை.

வீரமாமெலுமிச்சம் பழச்சாற்றுலே விதமாகவொரு சாமமரைத்துத்தட்டிச், சீராகமுழப்புடத்தி லாறக்கண்டு செந்தூரம் புடந்தசந்தான் செய்தாற்கேளு, வாரமாய் தேனிலரைப்பணவிடையதாக, மண்டலந்தான் கொண் டிடவே பால்நெய்யாகுஞ், சாரமாங் கொடுப்பை சிறு கீரையோடு தனித்த நெல்லி மிளகுடனே சார்ந்துக் கொள்ளே. 183

கொள்ளையிலே பச்சைவெண்ணெ காலிலிட்டுக்கூருக வுரங்கியேவுதயகாப, முள்ளதிலேதவிடுகொண்டு தேய்த் துப்போட்டு வுற்றவெந்நீர் காலில்விட்டுக் கழுவிப்போடு தள்ளையென்றநயன்த்துக் கெழுதக்கேணீ, தருவான விந்துப்பு துரிசுசீனம், வெள்ளையென்றமடற்றுத்தமரப் பொடியுமாக வேணபடிசரியாக நிறுத்துக்கொண்டே,

நிறுத்திதனைச் சப்பீரச்சாற்றுலாட்டி நீனமாய்கயறு செய்து வைத்துக்கொண்டு, வுறுத்துகின்ற நயனத்தி லெழுதுப்போது வுத்தமனே நந்திபத்திரிச் சாறுந் தேனும், சிறுத்தனெல்லிவேறுடனே திப்பிலியுஞ்சம ஞய் சீர்பெறவேகரிசாலைச் சாற்றிலாட்டி, வொருத்தி மூலைப்பாலதனி லுரைத்துப்போடு வொருநாளுக்கிரு பொழுதும் மருந்துதானே. 185

நாளொன்றுக்கிருநேர மருந்துகொண்டு நலமாகச் செய்திடவே தீருங்கண்ணில், வேளென்றுவந்தவேனுய் தொண்ணூற்றாறும் விரைந்துபோமருந்தி தல்லால் வேறேவேண்டாந், தூளென்றுங் குளிகையென்றுங் குழம்பதென்றுஞ் சொல்லுவார் வார்த்தைமெத்த வுலகி லுள்ளோர், தேளென்று கொட்டுமப்பா விழிநோய்யெல் லாஞ் சிரசுக்குத் தயிலமொன்று செப்பலாமே. 186

## நேத்திரவியாதிக்குத் தைலம்.

செப்புகின்ற வெள்ளருகுமூலமொன்றும் விலாமிச்ச விருவேலி நற்றுண்டியோடு, வொப்புடனே வகை வகைக்கு வொருபலமதாக வுயர்ந்தசீதேவிவேர் கொடுப்பை வேரும், வெப்பகலுங் கற்றாழைமூலமொன்று நலமான சலம்படிதான் பன்னிரண்டே. 187

ரெண்டுபடியாகவே வைத்துக்காச்சி நல்லெண் ணெய் நாழிவிட்டு அதிமதுரங் கோஷ்டம், கொண்ட தொரு தக்கோலமமுக்கருவேர் குருவான சடாவாஞ்சில் மஞ்சிட்டியோடு, பண்டுசொறிவால்மிளகு வெள்மிளகு சுக்கும் பச்சைவிலாமிச்சுவெட்டி வேருடன்தக்கோலந் தண்டுடைய சந்தனமுங்குங்குமப்பூமேலஞ் சார்மிளகு தாளியொடுரேணுகம் வெட்பாலே. 188

பாலைதிரிபாலை சிறுநாகப்பூவும் பாரிலுள்ள செண் பகப்பூதேவதாரஞ், சீலமுடன் வகைக்குவொரு கழஞ்சி கொண்டு செல்விளநீர் விட்டரைத்துச் சேர்த்துக் கொண்டு, பாலதிலேபடியிரண்டு கூடவார்த்துப் பதமாக வேவடித்து முழுகினுக்கா, லாமென்றநீர்விஷங்க ளெல் லாந்தீரு மப்பனேகண்குளிர்ச்சியாகுந்தானே. 189

ஆகவேகுழம்பொன்று சொல்லக்கேளு அழகான கொடிக் கொழுஞ்சிசாறு நான்கும், வேகமுள்ளகடுக்கா யோர் பலமதாகும் வேம்பானகருவேம்பினிலையவ்வீதந் தாகமுள்ளகளிப்பாக்கு மதுமவ்வீதந் தருவான பசுவின் பால் குறுணியாகுஞ், சாகவேயவித்ததனைப் பிழிந்துக் கொண்டு தனியான தேனதிலே படிதான்வாரே. 190

வார்த்தெரித்துக் குழம்பாக்கிவழித்துவைத்து வாள் விழியினீள்புருவம் புழுக்கள்புண்கள், தீர்ந்துவிடு மண்டலந்தான் பூசும்போது திகழ்விழிநோய் பலவும்போந் தீர்க்கமப்பா, பார்த்திடவே மேகராசாங்கமானுற் பாரிலுள்ள நோய்களுக்கு சஞ்சீவியாகுஞ், சாற்றியேதே முந்நூறும் வயித்தியராசாங்கத் தாரணியிலுள்ளவருக் கமிர்தமாமே. 191

## ஆனந்தவாயு கன்மவரலாறு.

ஆமென்ற வானந்தவாயு கொண்டா வரிதப்பா தீராது அதிககன்மந்தாமென்ற வுயிர்களைத்தான்கட்டித் தூக்கி தாரணியிற்போட்டறுத்த சண்டாளத்தாற், கோமென்றகோவுநீர்குடிக்கும்போது குழல்வைத்துவுண்டையிட்டகுலப்பாவந்தான், ஓமென்றவுயிர்களைத்தான் குடலைக்கீறி யுறும்பாவங்கொண்டதினு லுதித்ததாமே. 192

## கன்மநிவர்த்தி.

உதித்ததொருகருமந்தான் தீரவென்று லுற்றகொடிமரமொன்று வுயர்குடந்தானென்று, பதித்ததங்க கிரீடமொன்றுகுடைதானென்றுபரவுசொர்னங்காலையொன்று சப்பிரமஞ்சமொன்று, கதித்தசொர்னகிள்ளை யொன்று ஆலவட்டமொன்று கையிலெடுத்தாடுகின்ற வம்மானையொன்று, துதித்தசிவபூசைகுரு பூசையோடு சுகமாகச் செய்திடவே துடர்ந்தகன்மம்போமே. 193

## அவிழ்தவகை.

போனபின்புசெய்வதற்கு மருந்துகேளுபுகலுவேன் காந்தமது பலந்தானென்று, ஏனமுள்ள கெந்தியது பலந்தானென்று எலுமிச்சம்பழச்சாற்றுற் சாமமாட்டி, வானமுடன் கெசபுடமாய் மூன்றுபோடு வளமாக விநதடைவாய்புடத்தைப்போடு, ஞானமுடன் கொடிவேலிவேரின்பட்டை நலமாகப்பலமொன்று தூக்குத்தூக்கே.

தூக்கியேபிடித்துத் தூளாக்கிக்கொண்டு துடியாக வந்திடைக்குக் கெந்திசேர்த்து, தாக்கியே மூலைப்பாலாட்டிச்சாமஞ் சார்வானவெண்கருவாற் சாமம்ரண்டு,

பாக்கியமாயோட்டில்வைத்து மேலோடுமூடிப் பாங்கான சீலைமண்ணும் பரிவாய்ச்செய்து, வாங்கியே கெசபுடமாய்ப் போடுபோடு மைந்தனே முருக்கம்பூப்போலாம் வில்லை. 195

வில்லைதனைப் பொடிசெய்து வைத்துக் கொண்டு வீருனமுன்மருந்துங் கூடக்கூட்டி, எல்லையுள்ளவெருக்கிலையின் பாலாலாட்டி யிச்சையுடன் பில்லைசெய்து ரவியிற்காய்ந்தால், நல்லதென்று கெசபுடமாய் நாட்டிச்செய்து நலமாகவெடுத்துப்பார் கருஞ்சிவப்பாய்க்காணுந் தொல்லையென்றுவந்தநோய் தீரவென்றுற்சுகமாகப்பண வெடைதான்றேனிற்கொள்ளச், சொல்லரிதுமண்டலமே கொள்ளும்போதில் தோன்றுகின்றகுடல்வாத மண்டவாதம். 196

அண்டமென் றவாதமொடு வாய்வுகுன்ம மனேகநாள்சென்றதொரு கெண்டவீக்கம், பண்டுள்ளவுதாத்தில் வீக்கப்வாய்வு பாரித்தவயிறுமுதல் கரைத்துபோடுஞ், சண்டமாருதமான வாயுவத்தான் சண்ணுயடாமேலேருவண்ணம்பாரு, கண்டதொருபத்தியமாய்க் கொள்வாயானாற் கனமானநோய்திருங் கர்மப்போமே. 197

கர்மமது நிவர்த்தியைநான் முன்னேசொன்னேன் காசினியிலெளியவரும்வலியவருமுண்டு, தர்மமதுசெய்வதற்குப் பொருள்தானேது தாரணியிலுள்ளவற்குச் சாதிவண்ணம், வர்மமென்றகர்மமது நிவர்த்திசெய்யவரிசையுடன் சொல்லுகிறேன் வணங்கிக்கேளு, துர்மோகமாகாதுகோபமாகா துடியாகப்பலரையுமே தூஷணிக்கலாகா. 198

ஆகாதவழியொன்றுஞ் செய்யலாகாவாதித்தனமஸ்காரமன்னுதானம், போகாதசிவபூசை யங்கப்பிரதட்சணம் புகழானவாரமொடு பக்கம்நோன்பு, சாகாதவெட்டெழுத்து மஞ்செழுத்துஞ் சாதகமாய்செபஞ்செய்யவோமஞ்செய்ய, மோகமாய் சிவஸ்தலங்கள் தெரிசித்தேத்தல் முக்கியமாய் தீர்த்தங்கள் பலவுமாடே. 199

ஆடியேதோர்நந்தவனம் புஷ்பம்வைக்க வரசடிக்கும் நந்திக்கும் நீரேபெய்ய, தேடியதோரபிஷேகம்நெய்விளக்கு சிவஹோமந்தர்ப்பணங்கள் தீர்த்தவாச, மூடியதோர்பலவுயிர்க்கு முபசரித்தலுற்றதர்ம மிவவகையேயுண்மையாக, நாடியேகொள்வோர்க்குப் பாவமேதுநாள்தோறுஞ்செய்தகர்மம் பரிகாரமாமே. 200

ஆமப்பா நாள்தோஷம் நித்தியகர்ம மங்கனியாசமுதலாம் பிராணுயாமம், ஓமப்பாகருமத்தால் செய்தபாவமூபாராது பெரியோர்கள் பாதம்போற்று, நாமப்பாதருமத்தில் மனதுவைத்து நடந்துகொள்ளகருமங்கள் நாடாதோடுங், காமப்பால்மிஞ்சாதே கருமமிஞ்சுங் கன்னியரைப்பாராதே கசுடுபோக்கே. 201

பஞ்சலோக செந்தூரம்.

போக்கவே வகையொன்று சொல்லக்கேளு புகழ்பஞ்சலோகமது பொடிதான்வாங்கி, சேர்க்கவே வகையொன்று கழஞ்சியொன்று திறமாகசுத்திசெய்து வொக்கக்கூட்டித், தாக்கவேபஞ்ச பாஷாணம்நீருந் தயவாகவகையொன்று கழஞ்சியொன்று, தீர்க்கவே சுத்திசெய்துவொக்கக்கூட்டித் தெளிந்தரைக்க நீர்சொல்வேன் தெளிந்துபாரே. 202

பாரப்பாபூநீற்றிற் சாரங்கூட்டிப் பனியில்வைக்கச்செயநீராம்நீரைவாங்கி, நீரப்பாவிட்டரைத்து வில்லைதட்டி நிசமானகுக்குடமாம் புடத்தில்வைத்து, ஆறப்பாவாறியெடு மறுபடியுமறைத்து அப்பனே மூன்றுபுடந்திறமாய்ச்செய்து, காரப்பாகணபதிக்குப் பூசைசெய்துகட்டாகப் பரணிதனிலடைத்துவையே. 203

வைத்தபின்பு திரிகடுகு மதுரமோமம் வாழ்கரியசீரகமுங் கார்கோலோடு, நெய்தத்தொருவாலுழுவை காரெள்ளுங்கூட்டி நிசமானகொடுவெலி யமுக்கருச்சேங்கொட்டை, வைத்தபின்புவகையொன்று பலமொன்றுகும்வளர்பறங்கிச்சக்கைச் சூரணமிதற்குச்சமனுய், மொய்த்ததொருகையான் சாற்றதுதானுழி வீறுமிரமிச்சாறு நாழிகூட்டே. 204

கூட்டியேபால்நாழி மூன்றுமாகக் கொதிக்கையிலே
சூரணத்தையதனிற்போட்டு, நாட்டியேபசுவினெய்யரை
தேன்காலாய் நலமானவிட்டுமெழுகானபோது, கூட்டி
யேவழித்துவைப்பாய் பீங்கானுள்ளே சுகமானசெந்
தூரங்குன்றிகூட்டி, மாட்டியே மண்டலந்தான் கொள்
ளும்போதில் மகத்தான சூலைபதினெட்டுந்தீரு, மாட்
டியே குட்டமோடுகிரந்திதீரு மண்டைவண்டு பற்கடியு
மகன்றுபோமே. 205

போமென்றதின்னமொரு வகையைக்கேளுபுகழான
முருக்கம் பூச்சாறுநாழி, யாமென்ற முருங்கைப்பூச்சாறு
நாழி யழகானசெம்பரத்தம் பூச்சாறுநாழி, கோமென்ற
வரசின்பூச்சாறுநாழி கொடியதோ ரெருக்கின்பூச்சாறு
நாழி, வாமென்ற மல்லிகைப்பூச்சாறுநாழி வளர்நந்திப்
பூச்சாறு வரிசைகேளே. 206

வரிசையுடனொன்றாக்கி வகையைக்கேளு மனோ
சிலையு மரிதாரங்கெவுரிவெள்ளை, துரிசுடனே குதிரைப்
பல் கெந்திலிங்கந் துடியானரசம்வீரம் பூரங்கூட்டி, பரி
வானவகையொன்று பலந்தானொன்று பழச்சாற்றி லூற
வைத்தெடுத்துக் கொண்டு, அரிதான பழச்சாற்றாலாட்டு
ஆட்டுஅத்தனையுஞ் சாறுவற்றவாட்டினாக்கால். 207

ஆட்டினால் மெழுகாகுமதனைவாங்கி யடைதட்டிக்
காயவைத்து ஓட்டில்வைத்து, மூட்டியனல் கெசபுட
மாய்க்கட்டிப்போடு முறையான கரிசாலைச்சாற்றிலாட்டி,
தாட்டிகமாய்பின்யொருக்கால் புடத்தைப்போட்டுதானூறி
யெடுத்தாக்கால் நீறுப்பாரு, நாட்டியே பழச்சாற்றா
லாட்டி வில்லை நலமாகவோட்டில்வைத்துப் புடத்தைப்
போடே. 208

புடந்தனிலே காவிமண்போற் சிவந்துபோகும்
புனிதமரஞ் செப்பதனில் வைத்துக்கொண்டு, செடந்
தனிலே வந்ததொருசூலையாறுங் கிரந்திகுட்டந் தீராத
சிலந்திபுண்க, ளிடத்தில்வருமரையாப்பு பவுத்திரமாலை
யிடைந்துதடா பிளவையென்ற தெல்லாந்தீரும், குடந்

தனிலே வைத்தநீர்போலேவந்த கொடியதொரு சில விஷங்கள் குழறிப்போமே 209

## பூவகைலேகியம்.

போமென்ற வகையொன்று சொல்லக்கேளு புகழ் வேம்பினபூவுடனே புங்கின்பூவு, மாமென்றவில்வப்பூ, நெல்லிப்பூவு மரியதோர்கரைப்பூ விலாரிப்பூவு, மோ மென்றசெண்பகப்பூ சிறுநாகப்பூ வுத்தமனே குங்குமப்பூ கிராம்புபத்திரி, நாபென்றபுரசம்பூ கொத்தமல்லி நல மான காமப்பூ கஞ்சாப்பூவே. 210

பூவானமாம்பூவுமத்தம்பூவும் புகழான கரிசாலைப் பூவினோடு, காவானபொற்கையான் பூவினோடு கனமான பொற்கொன்றை யமுக்கிருப்பூவும், நாவானதூதுளம்பூ காட்டத்திப்பூ நல்கருவேலம்பூ வாவாரைப்பூ, தேவான வனச்சம்பூ கோங்கின்பூ திருவானநெஞ்சிற்பூ மாதளையின் பூவே. 211

தளையானபூவெல்லாஞ்சூரணித்து தயங்கமிர்த சர்க் கரையுஞ் சமனாய்ச்சேர்த்து, விளையானதென்னம்பூவும் பனையின்பூவும்விளங்கவே பூவெல்லாஞ்சமனாய்க்கொண்டு இளையாகதேனதிலே யரைப்படிதான்சேரு மியலான நெய்யதிலேயிரண்டுவாரு, இளையாமலடுப்பேற்றி லேகி யம்போற்றி லேகியம்செய்து எத்தி பீங்கானிற் பதனம் பண்ணே. 212

பண்ணியே புன்னைக்காயளவதாகப் பரிவாகவிரு நேரந்தின்றுயானு, லெண்ணிலாப்பிறமேக மெலும் புருக்கி யிருமலென்றமேகவகை நீரிழிவதெல்லாங், கண் ணிலே காணுமலோடிப்போகுங் கனமானவுட் சுறங்கள் நாவரட்சி, புண்ணிலே யெழுந்தகெந்த தாழியோடு புகைச்சலொடு யிளைப்புகடுப்புளைச்சல் போமே. 213

உலைச்சல்போம் பித்தமது வோடிப்போகு மூலர்ந்த வுடலுதிரமது வூறுமூறுந், தலைச்சவிந்து தம்பனமாய் பிலத்துப்போகுந் தாதுவிர்த்தியுண்டாகும் பெரும்பாடு தீரும், விளைச்சலென்ற குன்மமெல்லாமறுந்துப்போகும்

வீரியந்தான் மெத்தவடா வெய்மைசொன்னே, மளேச்ச தொருகருமத்தை நிவர்த்திசெய்து அறமான தருமத்துக் காளாய்ச்சேரே. 214

சேர்ப்பதற்கு இன்னமொருமருந்துகேளு செங்கழு நீர்க்கிழங்குடனே கொட்டிநெய்தல், நீர்ப்படர்ந்தவல்லி தாமரைக்கிழங்கு நிலப்பனையு மமுக்கரு நீர்வளளியாகும், பாரப்படர்ந்த நன்னாரிமூத்தக்காசு பகர்ந்தவதிவிடைய மொடுகச்சேலஞ்சுக்கு, கார்படர்ந்த கடலிறஞ்சி பறங்கிப் பட்டை கருதியதோர்கூகைநீறுங் கஞ்சமோரிதழே.

ஓரிதழின்மூலமொடு வில்வமூலமூற்றதொரு மாதளை யாவாரைமூலம், பாரிலுள்ளகருவாழைக் கிழங்கிேேனாடு பகர்கருணைவெருகினேடு மலைதாங்கிமூலஞ், சீரிதழின் கற்றாழைசங்குமூலஞ் சித்திரமூலத்துடனே யதிமதுரங் கோஷ்டம், வேர்சிறந்த வகையெல்லாம் பலமொன்றுக வில்லைவில்லையாய்நறுக்கு வெயிலில்வைத்து, நீர்சிறந்து காய்ந்தவுடனிடித்துத்தூளாய் நெய்படிதான் கொதிக்கை யிலே சூரணத்தை நேர்ந்தே. 216

நேர்ந்த பின்பு தேனதிலே நெய்யிற்பாதி நேராக விட்டளக்கி மெழுகதுபோல்வாங்கி, சாந்தமுளலேகியத் தைப்பதனம்பண்ணு சாந்தகமாம் புன்னைக் காயளவ தாகத், தேர்ந்தபின்புயிருநேரங் கொள்வாயாகில் தீராத கிராணிவகை தீருந்தீரும், வாய்ந்தரத்த மலசலங்கள் கடுப்புமூலம் வயிற்றுளைக்சல்வாய்வுமுதல் சீரணங்கள், கூர்ந்தபித்தநீர்தரிப்புப் பிறமேகங்கள் குடிப்போரும் லேகியத்தைக் கொண்டபோதே. 217

## கிராணிக்கு லேகியம்.

கொண்டபின்பு இன்னமொரு வகையைக் கேளு கூவிளத்தின் பிஞ்சுடனே மாதளையின்பிஞ்சும், விண்ட தோரரத்தைப்பிஞ் சாத்திப்பிஞ்சும் வெண்மருதம் பிஞ் சுடனே யகத்திப்பிஞ்சுங், கண்டதோர் கடுக்காயின் பிஞ் சுடனேநல்ல கதலிப்பிஞ்சுடன் வண்டைப்பிஞ்சினேடு, தண்டமிழ்சேர் புளியம்பிஞ்சுடனே நல்ல தக்காளிவித் துடனே தகரைப்பிஞ்சே. 218

பிஞ்சானமாம் பிஞ்சுங் கோவைப்பிஞ்சும் பெரு வேம்பின் பிஞ்சுடனே முசுட்டைப்பிஞ்சும், பஞ்சான நெல்லிப்பிஞ்சாரிசம்பிஞ்சும் பகர்தாமரைப்பிஞ்சும் பனிச் சைபிஞ்சும், நஞ்சானமாதளையின் பிஞ்சுங்கூட நலமான வகைக்கொரு பலமாய்வாங்கி, துஞ்சவேயிடித்ததனை மைபோலாக்கி சுகமான நெல்லெண்ணை பசுவிநெய்யே.

நெய்யானவகைவகைக்குப் பலமிரண்டும் நேரான தேனதிலே யரைப்படியுமாகச், செய்யவே கற்கண்டு நாலுபலமாகுஞ் சீரகஞ்சுக்கதிமதுரம் வகைக்கு ஒருபல மாய், மெய்யாகச்சூரனித்து அதனிற்சேர்த்து விருதாகக் குழம்புபோற் பண்ணிக்கொண்டு, கையான கறண்டியி லோர்பலமாய்க்கொள்ளு கயரோகங் கிராணியதிகாரம் போக்கே. 220

போக்கென்ற போக்கெல்லாமெடுபட்டோடும் பொல் லாதக்டுப்புடனேயிரத்தம்போகுந், தாக்கென்றமூலமண்டி யுள்ளேவாங்குந் தாதுவிர்த்தியுண்டாகுந் தாகந்தீரு, மூக்கென்றசத்திவிக்க லெங்கேபோச்சு உடல்வாட்சி கன ரோகமெங்கே போச்சே, தேக்கென்ற காலநதிகையசதி யெங்கே தேகத்திலில்லாம லோடிப்போச்சே. 221

ஓடிவிடுஞ் சயமீளையிருமல்காச மூற்றரத்தபித்தமொடு பிறமேகங்கள், நாடியதோர் நீர்க்கடுப்புக் கல்லடைப்பு நீலமாகுஞ் சதையடைப்பும் நன்முய்த்திருங், கூடிய தோர் பெரும்பாடு முள்ளுறுக்கி கொண்டதோ ரெலும் புருக்கி யெரிவுகாந்தல், நீடியதோர் நெஞ்செரிவுங் கை கால்காந்தல் நிசமாகத்திருமடா பித்தம்பேச்சே. 222

சுரங்களுக்குக் கலிக்கம்.

போச்சென்ற தின்னமொருமருந்துகேளு புங்கம் வித்து சங்கம்வித்து புடலம்வித்து, ஆச்சென்ற அத்தி வித்து அகத்திவித்து அதிகமாம் பேய்ப்பீர்க்கும் பேய்ச் சுரையின்வித்தும், பூச்சென்ற தகரைவித்து கரிப்பான் வித்து பொருந்து மாவாரைவித்து மருதம்வித்து, வாச் சென்றதவுரிவித்து தில்லைவித்து மகிழம்வித்து புல்லா மணக்குமூத்துமாமே. 223

மூத்தானநேர்வாள மிளகுகூட்டி முதலான சம்பீ
ரச்சாற்ருலரைத்து, கத்தானவாட்டினுட பித்துங்கூட்
டிக் கலந்தரைத்துக் கண்ணிலிட வெள்ளளவுதானும்,
பத்தானவெற்றிலேயின் சாற்றிலுரைத்திட்டால் பலசுரங்
கள்பேய்ச்சுரங்கள் பயித்தியங்கண்மாலே, சுத்தானசன்னி
யொடு குமரகண்டன் சுருதியாமஞ்சனத்தன் சுருக்கம்
பாரே. 224

சுருக்காகக் கண்ணிலிட்டுக் கண்கோபித்தாற் சொல்
லுவேன் சோறுதயிர் பிசைந்துகட்டு, தருக்காகக் கற்
ருழை சோறுசீரகமுந்தான் பிசைந்து பிழிந்துகட்டில்
கண்வெப்பந்தீரு, முருக்காகவின்னமொரு சேதிகேளு
முரையாத சேதியெல்லா முரைத்திட்டேனுன், பொருக்
காதநோயுமுண்டோ வுலகத்துள்ளே புதுமையிந்தசாஸ்
திரத்தைப் போற்றிக்கொள்ளே, 225

### குமரித்தைலம்.

கொள்ளவே வகையொன்று சொல்லக்கேளு குமரி
யுடசாருென்று கொடுப்பைச்சாருென்று, கள்ளமில்லாக்
கரிசாலேச் சாறுபடியொன்று காயானகீழ்க்காயி னெல்லிச்
சாருென்று, மெள்ளவேபடியொன்று விஷ்ணுகாந்தி
விளைந்தசந்திரகாந்திரசம் படியுமொன்று, தள்ளவேபடி
யொன்று தாழைவிழுதுச்சாறு சார்வாகப்படியொன்று
நீர்முள்ளிச்சாறே. 226

முள்ளிரசம் படியொன்று முசுமுசுக்கை முளையான
சாருென்று பேய்ப்புடல்தானென்று, வள்ளியென்ற நீர்
வள்ளிச்சாறுபடியொன்று வருகின்றசெம்முள்ளிச்சாறு
படியொன்றுவுள்ளியென்ற வீறுள்ளிச்சாறுபடியொன்று
வூறுகின்ற வல்லாரைச்சாறுபடியொன்று, வெள்ளரியின்
சாருென்று குமிழஞ்சாருென்று விதமானதூதளேச்சா
ருென்றுதானே. 227

ஒன்ருனகருப்பஞ்சா ருென்றுவில்வத் தூறுகின்ற
சாருென்று கண்டங்கத்திரி, நன்ருன பிரமிச்சாறுபடி
தானென்று நலமானகஞ்சாவின் சாறுபடியொன்று,
வென்ருனபழச்சாறு படிதானென்று வெற்றிலேயின்

சாருென்று புளியிலைச்சாருென்று, கன்ருனசெருப்படி யின் சாறுபடியொன்று கருவேம்பினிலைச்சாறு படிதா னென்றே. 228

படியான பசலைரசம்படிதா னென்று பகருகின்ற புளியாரைச் சாறுபடியொன்று, குடியான துளசிரசம் படிதானென்று கூர்மிளகுதக்காளிச் சாறுபடியொன்று, வடிவான வித்தையெல்லாம் வடிகொண்டொக்க வகை யானதாழிக்கு ளொன்ருய் வார்த்து, மடியாதபால் நாழி யிளநீர்நாழி வைத்துவிட்டுக் குழம்பானவாறுகேளே.

வாறுகேள் நெய்யதனிற் படிதான்வாரு வரிசையாய் தேனதிலே யதனிற்பாதி, கூறுகேள் மதுரஞ்சீரகம் வெட்பாலை கோஷ்டமுடனேல மதிவிடயஞ்சுக்கும், வேறுவெள்ளைக்குந்திரிக்க மிளகுதிப்பிலி வீருனவகை யொன்று பலமொன்ருகுஞ், சூரணித்துப்பாகுதனிற் சொல்லக்கேளு சுறுக்கானநெற்பொரியுங் கற்கண்டும் வேண்டே. 230

வேண்டியேவகையொன்று பலமொன்ருக வெற்றி யுள்ள திரிபலையும் பலமொன்ருகும், தாண்டியேசூரணித் தைத்தூவிக்கிண்டி சதிரான மெழுகுபோல வாங்கி வைத்து, ஊட்டியே கணபதிக்குப் பூஜைசெய்து ஒரு நாளைக்கிருநேர முறவாய்க்கொள்ள, பூண்டதொரு க்ஷய ரோக மிருமல்பதினுறும் போராடமிளைப்பீளை மந்தார காசம். 231

காசமென்ற சலகாசம் பித்தகாசம் காந்தசிலேற்பன காசம் வாசகாசம் நாசமென்ற ரத்தபித்தஞ் சத்தியுளமாந் தை, கற்குவளை விப்புருதிரத்தகாசம், பாசமென்ற மருந் திடுநல் முதலாயுள்ள, பண்டுள்ள பீனிசமுபண்டைச் சூலை, வாசமென்பிறமேகங் கிரந்திசூலை, மண்டைதரிக் கின்றபித்தந்தலை சுழற்றல் மயக்கம். 232

மயக்கமொடு பித்தமெல்லாமெங்கே போச்சு, வாத மொடு நீர்சிறுப்புமாண்டுபோச்சு, தியக்கமுட அஸ்தி சுரம் வெப்பும்போச்சு-சிரசில் தின்றபித்தமெல்லாஞ் சித றிப்போச்சு, தயக்குண்டசரீரத்தின் வரட்சிபோச்சு சரீம

மதுதுலித்துத் தளுப்புமாச்சு தயிக்கியமென்ற புத்தி யெல்லாம் நற்புத்தியாச்சு, தாதுவித்தையாமிதுவே யறிந்துகொள்ளே. 233

அறிவான பெரியோர்கட்கிந் நூல்வேணு, மறிவுகெட்டவுலுத்தர்களுக்காகாதென்றுங், குறியாக நினைவுவைத்துக்கன்மந் தீர்த்துக் குவலயத்தில் மருந்துசெய்யிற் குருவவனேயாகும், மறிவானமனத்தோர்க்கு மருந்தாகாது, வஞ்சம்பொய்யற்றோருக்கு மருந்துவேண்டாம், நெறியான வயித்தியன்றன் மனதுநொந்தால் - நேர்ந்த நோய்திராது நினைவில்லையே. 234

நினைவிலே வைப்பதென்ன குருவின்பாதம் - நிச்சயமாஞ்சிவன்பாதந் தேவிபாதம் கனவினிலுமறவாதேயொருநாளுந்தான், கருமாந்தமில்லையடா நோயுமில்லை சினமானதாகாது புத்திசொன்னேன் - சேதிமானுனுக்காலறிந்துகொள்வான், மனமதிலே தெளிவானுல் முத்தியுண்டாம்-வஞ்சகமொன்ருகாது வாசிபாரே. 235

வாசியினுல் மோக்ஷமது வந்துபோச்சு - மருந்தினுற்றேகமதுவலுத்தும் போச்சு, பூஜையினுற்சித்தது வுமற்றுப்போச்சு, புலவருக்குமிந்த முறைபுகலப்போமோ கேசியென்ற குளிகையினுற்கெவனமாச்சு, சித்தியென்ற பெயராச்சு சிவயோகத்தால், தாசியென்ற பெண்மேலே மோகமானுற் சாற்றியதோர் கற்பமெல்லாந தவறிப்போச்சே. 236

தவருமலின்மமொரு சேதிகேளு - சாதகமாயின்னமொரு மருந்துசொல்வே, நவரத்தினம் வகைகழஞ்சிரசமுய்வங்கம் நலமாக வகைகழஞ்சி யுருக்கிச்சேர்த்து, சவையாகும் மலுவந்திற் பொடித்துக்கொண்டு, சப்பீரச்சாருலேயரைப்பாய்சாமங், கவையாகப் பொற்லலயின் சாற்றுற்சாதங்கட்டாக வில்லைசெய்து காயக்கண்டே

கண்டதனைப்பொடிசெய்து இடைக்கிடையேகெந்தி கலந்தரைத்துக் கும்பியிலேகருதியேத்தி - யண்டதற்குச் சீலையைந்து செய்துபின்பு பரிவாகவாலுகைமி லெரியெண்சாமந், தொண்டேனே யெரித்தபின்பு சலாகை

யிட்டு சோதித்தாலருண நிறந்தோன்றீற்றானா லண்டர் பிரரன்றுமுகற்குங் கணபதிக்கு வர்ச்சித்துத் தீமாற்றி யாறவையே. 238

ஆறவைத்து செந்தூரமுடைத்துப்பார்த்து அம்மி பிலேபொடிசெய்து பரணிதனிலடைத்து - நீறவைத்த செந்தூரம் பணவிடைதான் கொள்ளநீர்ச் சிறுப்பு கல் லடைப்புஞ் சதையடைப்பு, மூறவைத்த நீரிழிவுங்கிரந்தி சூலையுறுதியாங் குட்டமொதிவாத நீர்கள், தேறவைத்த சரீரவலி சூடுவீக்கந் தேனிலே கொண்டிடவே சித்தி யாமே. 239

சித்தியாந்தயிலமொன்று திறமாய்ச் சொல்வேன் சென்னையெண்ணை புன்னையெண்ணை புங்கனெண்ணை, மூத்தியாமவேப்பெண்ணை-எள்ளினெண்ணை மூனையான குருந் தெண்ணை யோரண்டத் தெண்ணை - சத்தியாந் தேங்காயி னெண்ணையோடு தனிப்பசுவி னெய்யுடனே யாட்டுனெய்யும் வெத்தியாம் பன்றினெய் மயில்நெய் யோடு விரிவான மீனெய்யும் விரியனுடனெய்யே. 240

நெய்யான சாரையினெய் வகையொன்றுக்கு நிலை வாகவரைப்படியாய் நிசமாய்ச்சேர்த்து - கையான நாகத் தின் கண்டத்தோடு கதிந்தனல்லமூசுறு மூட்டைகம்பிளி யுங்குக்கில, மையானவரிச்சுருளு மழுங்குமாமை மயிலிர குங் காக்கைக்கண் தேளரணையோடு மெய்யான மூய லுடும்பு மானைக்கொம்புமிக்க பல்லியாட்டின் கொம்பெரு மைக்கொம்புஞ், செய்யவுங்காண்டாமிருகக் கொம்பெரு மைக்கொம்புஞ், செம்புலியின் தோலுடனே செந்நாய் மண்டை. 241

மண்டையென்ற மனுஷர்தலைகலையின் கொம்புலரு குதிரைக்குளம்புடனே மந்நனந்தை, கண்டதொரு விலாங்கின்தோல் மசதைமீன் தலையுங்காமருபியின் தலை யும் புருவினெச்ச, மூண்டதொரு மிளகுசுக்கு வெள் ளுள்ளியோடு வுறவான பருந்தின் மூட்டை யூர்க்குருவி மூட்டை வண்டான கழுதைமண்டை யுடும்பினுட்சிரசு வலுத்துநின்ற குதிரைமண்டை வசும்புநரகணமே.

கனமான விவையெல்லாம் வகையொன்றுக்கு கழஞ் சாகப்பொடித்தந்த யெண்ணெயிலே போட்டு நிணமான யெண்ணெதனைப் பத்துநாட்செலுத்தி நிசமாக மெழுகு பதந்தனில்வடித்து, கனமான கணபதிக்கும் வயிரவர்க் குங் கருத்துடனே பூசித்து கடத்தில்வைத்து, குணமாக வேணுமென்றாற் சரீரத்திலிட்டுக் குடித்திடவேகாண்டி யெண்ணெ குணத்தைக்கேளே. 243

கேளடா குமாகண்டனென்றவலியஞ்சுங் கொடி தானபிறவீச்சுசன்னிபதின் மூன்றும் - நாளடாசென்ற தொருவாதமென்பதும் நடுநடுங்கியோடுமடா குட்ட மொடு குலநோய் - தூளடாதூள்படுத்துப் போடுமிந் தத் தயிலஞ்சொல்லார்கள் பெரியோர்களுபாசத்தின் சூட் சஞ் சூடாமெய்க்கடுப்பு கருட்டுக்கட்டுந் தூறவான புண் புரைகள் வெட்டுக்குத்தே. 244

குத்தென்ற கழலையொடு பெருங்கால்வீக்கங் கூடகை வலி முறிவுகைகால் குதிரைக்கால் முறிவு - மற்றதோ ரெலும்பெல்லா மூறிப்போகு மசையாத பிடிப்புசட்டுத் தெறிக்கும்பாரு, செத்ததொரு கைகாலும் பிலமுண்டா குஞ் சித்திபெற்ற தயிலமடாதிறமாய்ச்சொன்னேன் பத்தி னின்ற பற்றெல்லாம்விட்டுப்போகும் பத்தியமா யித்தயி லம் பரிந்துகொள்ளே. 245

கொள்ளவே யின்னமொரு சேதிகேளு - கூறுன வழிஞ்சில்வேர் கொன்றை வேரும் - வெள்ளெருக்கின் வேருடனே சித்திரமூலம் வெண்புரசம் வேருடனே சிவ ஞர்வேம்பு, மெள்ளவே காஞ்சுரைவேர் புரசம்வேரும் வெண்ணுச்சிவேருடனே வில்வவேருங், கள்ளவேயகி லோடு தேவதாரங் கழறுகின்றசந்தனமுங் காஞ்சுரை வேரே. 246

வேரான மருதோன்றியிசங்கின்வேரும் வேம்பின் வேர் சதுரக்கள்ளிவேருங்கூட, தாரானதேகதான் வேர் வசம்புமாகுந் தானவகையாய் வெவ்வேறாய்த் தறித் துலர்த்தி - சீரானபானைதனிலிட்டுமூடி சேர்க்கவேகுழித்

தயிலஞ்சிறக்கவாங்கி - பார்த்தனிலே வெவ்வேறே தயிலம்வாங்கு பருத்தபுங்கின்வேர்தயிலம் படியேவாங்கே.

வாங்கியே வகைதனக்கோ ரரைப்படியாம் வீதம் வாகானபாண்டத்து ளொன்றாய்விட்டு, நீங்கியேபோகாம லொருபலங்கற்பூரம் நிறையாகக் காச்சியே வைத்துக் கொண்டு - வோங்கியே சரீரத்திலெல்லாம் பூசிலுடல் வந்தவாத மெல்லாமோடிப்போகும் மேங்கியே குட்ட மெல்லா மெடுபட்டோடுமிசை கெட்ட வலியனைத்து மேங்கிப்போச்சே. 248

போச்சென்ற தயிலத்தை ரசத்திற்குத்திப் பொங்கிய தோர் சுடுசோற்றில் வைத்தாயானால், ஆச்சென்ற சூதமது குளிகையாகு மச்சூதம்வங்கத்தி நீரைவாங்கும், பேச்சென்ற வெள்ளியது பத்துமாற்றுபேரானசூதத்தை செந்தூரத்தால், மூச்சென்ற வெள்ளியிலே பத்துமாற்று மூதண்ட குளிகையிதுவாடுமாட்டே. 249

ஆட்டினுடவமுரியொன்று கோமூத்திரமொன்று மானையின்றன் மூரியொன்று புரவியொன்று - நாட்டி லுள்ளகுறும்பாட்டி நீர்தானென்று நாரிசிறுநீரொன்று பெருமைநீரொன்று, தாட்டிகமாய் வகைக்குவொரு படி தான்வாங்கி தன்னுக்குள் வெடியுப்பு மிந்துப்போடு, மூட்டியே வளையலுப்புங் கறியுப்போடு மூதண்டவமுரி வியப்பு முருவியுப்பே. 250

உப்பென்ற வீரமொடுதுரிசிபூர மூரமுடனே வகைக் குக்கால் பலமேகூட்டு, அப்பென்ற சத்திச்சார மெவாச் சாரந்தா னன்னமென்றபோதியொடு வகைக்குவொரு பலமா - யொப்புடனே பொடித்திட்டு வொன்றாய்க்காச்சி யுறவான மெழுகதுபோலுண்டை செய்து - தப்பென்ற வோட்டில்வைத்துச் சீலைசெய்து சார்வாகபுழப்புடத்திற் சார்ந்துபோடே. 251

போட்டிவே நீறியது வெள்ளையாகும்புகழானவெண் கருவிலெருக்கின் பால்விட்டு, நாட்டிடவேயரைத்து வில்லை ரவிதான்கண்டால் நலமாகமுன்போல புடைத் தைப்போடு, காட்டிகமாய் நீறும்பின்னெடுத்துக்கொண்டு

சம்பீரச்சாற்றாலே யரைப்பாய்சாமம் - கூட்டியேவில்லை செய்து ரவியில்வைத்துக் கூசாமல் முன்போலே புடத் தைப்போடே. 252

புடம்போடே வெளுக்கும் பூநீறுபோலே பொல் லாத சன்மமெல்லாம் பொடியாய்ப்போகுஞ், சடமான கற்பநோயாறுந்தீருஞ் சடத்துள்நின்ற வாயுவெல்லாஞ் சவ்வாய்த்தள்ளுங், குடமான பெருவயிறுங் குட்டந் திருங் கொடிய மகோதரமுடனே குடல் வாதம்போ், மூடனுடுஞ் சூலைநீர் பொடிப்புப்பண்களுக முடிந்து போச்சுதடா உண்மைதானே. 253

அரப்பொடி செந்தூரம்.

உண்மையென்ற செந்தூர மொன்றுகேளு வுலோக மென்ற வரப்பொடியுந் தாம்பிரப்பொடியும் - வண்மை யென்ற வுருக்குடனே வெண்கலம் பித்தளையும் வாகான நாகமொடு திராயுமாகுந் தண்மையென்ற வெள்ளியங் காரீயம்வெள்ளி தருவான தங்கமொடு ரத்தினமொன்ப தும் - பெண்மயிலே வகைகழஞ்சி வீதம்வாங்கி பேருகப் பொடித்துடனே சாற்றக்கேளே. 254

சாற்றவே சாமம்ரண்டு பொற்றலையின் சாற்றுன் சாதகமாம் சாமம்ரண்டு கைவிடாமல் - சேர்த்தைரத்து வில்லைசெய்து வுலரப்போடு, செங்கலென்ற குகையில் வைத்து சீலைசெய்து பார்த்தாலே பண்ணியென்ற புடத் திற்போடு பருவமாயாறியபின் னெடுத்துப்பாரு நீற் றுகும் நீற்றதனை யெடுத்துக்கொண்டு நினைவுடனே முன்போலே யரைத்துத்தீரே. 255

தீர்ந்தபின்பு பில்லைசெய்து ரவியிற்போடு செய மாக முன்போலே புடத்தைப்போடு, ஆர்ந்தபின்பு ஆயி யெடுபுடந்தானஞ்சி லாதியென்ற பவளவன்னமாகும்

பாரு, சேர்ந்ததொரு செந்தூரஞ் செப்பில்வைத்து தேவி பதம் பூஜைசெய்து செப்பக்கேளு, போந்ததோ ரெந் தந்த நோய்க்கெல்லா ந்தான் போடப்பா பணவிடை தான் புதுமைகேளே. 256

புதுமையென்ற செந்தூரந் தேனிற் கொள்ளப் போகுமடா குன்மமென்ற வாய்வுகுட்டம் - கதுமை யென்ற நெய்யிலே கொண்டாயானாற் கனதைபெற்ற வுட்சுரங்கள் காணுதோடும், புதுமையுள்ள பச்சை வெண்ணெ கண்ணிற்கொண்டாற், போகுமடா வுடம்பி லுள்ள வறட்சியெல்லா மதுமையென்ற சீரகத்தைக் கியாழஞ்செய்து வாகாகக்கியாழத்திற் கொண்டாயானால்.

கொண்டிடவே நெஞ்செரித்த பித்தந்தீரும் குறுந் தோட்டிவேரதனைக்கியாழஞ்செய்து, நண்டதனிற்கொண் டிடவே வாதந்திரும் நல்லவெஞ்சிச் சாறதனிற் கொண் டாற்கேளு, பண்டுடைய வாதமொடு சுரமுந்திரும் பருத்த முலைப்பால்தனிற் சன்னிதீரும், பெண்கட்கு வெள்ளையுள்ளித் தயிலந்தன்னிற் பேணியே கொண் டிடவே யறுமூலம் போமே. 258

ஆருனமிளகுநீர் தன்னிற்கொள்ள வனுகாது சுர மிருமலற்றுப்போகுங், கூருனசுக்கு கியாழத்திற் கொள் ளக் குணமாகுஞ்செரியாமை பொருமல்வாய்வு, நூருன தூதுவளை கண்டங்கத்திரி நுணுக்கமுள்ள விட்டவியல் நுகர்ந்தார்கேளு, பேருனக்ஷயமிரும விளைப்பு கக்கல் போகாதேயோடுமடா பின்னேகேளே. 259

பின்னையென்ற வெள்ளாட்டின் பாலிற் கொள்ள போனவயிற்றுளைச்சல் கடுப்புப்போகு, மன்னையென்ற பிள்ளைகட்குக் கணரோகணத்தை வடுத்ததோர் வியாதிக் கனுபானங்கேளு, தன்னையென்ன வல்லாரை மாதளை

தூதளையுந் தானென்ற குடிநீரிற்சாந்தமாகு, மின்ன மென்ன பனைவெல்லமதனிற்கொள்ள விடும்பான சூலை வகை யெல்லாம் போமே. 260

போமென்ற மேகவகை நீர்தரிப்பும் பிறமேகந் தீருமடா சஞ்சீவிதன்னி, லாமென்ற நீரிழிவுதீரக்கேளு மாவாரைப் பஞ்சாங்கமதனிற்கொள்ளு, நாமென்ற கால் கைகளுளைப்புத்திர நல்லாவின் பால்தனிலே கொண் டால் தீருந், தாமென்ற கிரந்திவகை தீரச்சொல்வேன் சர்க்கரையிற் கொண்டிடவே சாந்தமாமே. 261

ஆகுமே கிரிச்சுரங்கள் தீரவென்று லாதியென்ற திரிகடுகு திரிபலாதி, வேகுமேயிளவருப்பாய் சூரணித்து வெள்ளையுள்ளித் தயிலத்திற் குழைத்துட் கொள்ளப், போகுமே பாண்டுவகை சொல்லக்கேளு பொற்கையான் திரிகடுகு பொடித்துத்தேனி, வேகுமே கொண்டிடவே வாதபித்த மிதமானசந்தனத்தி லிட்டபோதே. 262

இட்டபின்பு பெரும்பாடு தீரக்கேளு இதமானசாதிக் காய் கஞ்சாசூரணத்திற், பட்டதோ ரெலும்புருக்கி தீ வென்றால் பத்திரியுமேலமொடு வால்மிளகு கிராம்பு சுட்டதோர் நெய்யதனிற் கொள்ளத்தீரும் தொண் ணூற்று ஆறான கண்ணோயுக்கு, வட்டமுலைப் பால தனிற் கொள்ளுகொள்ளு வண்டுகடியானதற்கு வகை யைக்கேளு, கெட்டதொரு சிவன்வேம்பின் பொடியிற் கொள்ளச் சுடுகரப்பனுக்கு கருஞ்சீரகச் சூரணமே. 263

சூரணமாஞ் சுரந்தனக்கு அனுபானங்கேள் சுக் குடனே பற்படகந் தூதளைபேய்ப்புடலுங், காரணமாங் கண்டங் கத்திரிதோடை நிலவேம்புங் கனத்தமுத்தக் காசுடனே கியாழத்திற்கொள்ள, வாரணமாஞ் சுரங்க

ளறுபத்துநாலு மளவற்றகபமிருமலகலும்பாரு, மாரண மாங்கால்பிடிப்பு கைபிடிப்பு வளமான காட்டுவகை மருந்துகேளே. 264

மருந்தென்ன வழுக்கருவுஞ் சீனப்பாவும் வாகான சித்திரமூலத்தின் வேருந், திருந்துசீரகமுஞ் சூரணித்துத்தேனிற் றின்றிடவே கட்டெல்லாந் தெரித்துப்போகு, மருந்தவே குட்டமொடு குறைநோயுக்குமரிதான சேங்கொட்டை தயிலத்திற்கொள் இருந்ததோர் பீனிசமு மண்டைச்சூலைக் கெண்ணெயிலே குழைத்து நீ விழுங்குவாயே. 265

விழுங்கவே யானந்த வாய்வுக்குத்தான் மேலான வெள்ளையுள்ளி யரைத்துருட்டிக்கொள், மிழுங்கவே கடுப்புக்கு மாதளங்காய்வித்து மிகவரைத்து விழுங்கிடப் போமதிசாரந்தான், ஒழுங்கான சுக்குடனே நெல்லிமுள்ளியோமமுடன் சீரகத்தினுரைத்துக்கொள்ளு, மழுங்கவே நோய்களெல்லா மகன்றுபோகு மந்திரத்தின் நவலோகத்ததிகங் காணே. 266

கட்டினங்களுக்கு பால்மெழுகு

காணவே சேதியொன்று சொல்லக்கேளு கழுதைப் பாலெருமைப்பால் பசுவின்பாலுந், தோணவே செம்மறிப்பால் வெள்ளாட்டின்பால் சுத்தமுலைப் பாலுடனே பன்றிப்பாலும், பேணவே நாய்ப்பாலுங் குதிரைப் பாலும் போரான வத்திப்பாலரசின்பாலும், பூணவே யாலின்பாலித்திப்பாலும் புகழான வெருக்கின்பால் புங்கின்பாலே. 267

பாலான கள்ளிப்பா லாதளையின்பால் பருத்ததோர் தில்லைப்பால் மாம்பாலோடு, நாலான நத்தையின்சிப்பிப் பாலும் நண்டின்பால் பீராயனபால் சதுரக்கள்ளி,

கோளான குண்டலிப்பா லிதுவெல்லாந்தான், கொண்டு வந்து வகைக்குழக்காய் குறுகக்காச்சில், சாலவே மெழு காகு மதனைவாங்கிச் சார்வான குகையாகச் செய்து கொள்ளே. 268

குகைக்குள்ளே வைத்துருக்க நாசங்கட்டுங் கூறுன காரீயங் குமறிக்கட்டும், பகைத்ததோர் வெள்ளியநீலை வாங்கும் பரிவான பாஷாணமுருகியாடுஞ், செகத்திலே ரசமப்பாசீருமற் கட்டுஞ்சிவமானசாதிலிங்கஞ் சிவந்து நீர்க்கு, மகத்தானவுப்பதுதான் மணிபோலாடு மஞ்ச ளென்ற கெவுரியது மலைபோலாமே. 269

மலையான வரிதாரம்வங்கமாகு மகத்தானதாம்பரத்தி னூறல்போகு, மூலையான விரும்பதுதானுருகியாடு மூல கத்திலந்த வகையுண்டோவில்லை, சிலையான குகையதனை மண்குகையில் வைத்து சிறப்பான வெண்காரங் கீழ்மே லிட்டு, புலையாமல் மேல்மூடி சீலைசெய்து புகழ்ந்துருக் கக்சரக்கெல்லா மணியாய்நிற்கும். 270

நிற்கின்ற வகைவகையாம் பாஷாணத்தில் நேரா கக்குணங்கண்டு வுலோகத்தாட்சி, சிற்கின்ற தங்கமிட் டுச்சூதமிட்டு செந்தூரமாக்கியே வேதைபாரு, வொக் குமே பத்தரையுந் தப்பாதப்பா வுண்மையாய் சொல்லி விட்டே னுலகத்தோர்க்குப், பக்குவமேயானுகச் செய்ய லாகும் பாவிகளுக் கொருநாளும் பலியாதென்னே. 271

என்னசெந்தூ ரத்தினங்கள் கண்டு எடுத்தெந்த நோய்களெல்லாந் தீருஞ்சொன்னேன், சொன்னமாஞ் செந்தூரங் கொண்டாயானல் சுறுக்காகுங்காயசித்தி நரைதிரையும்போகு, மன்னவர்போ லிக்குருவின் சவுக் கார மெய்துமகத்தான பூநீறுஇதற்குயீடோ, கன்ன மென்ற கன்னக்கோல் வாதத்துக்குக் கறைக்கண்டார் தனையிதனுச் கட்டிக்கொள்ளே. 272

கட்டியதோர் துரிசுதனை நீற்றக்கேளு கற்சுண்ண மதனில்வைத்து அமுரிவிட்டுநீற்று, பட்டிடவே சுற் சுண்ண முறைக்குநாழிபத்து முறைநீரறியதைப் பரு வஞ்செய்து, மூத்தியதோர் நாகத்திற் பாஷாணமிட்டு முறையாகவறுத்ததனை வெறுக்கநீற்ற, தொற்றியதோர் வெண்கருவால் மேற்கவசஞ்செய்து செயமானவுவர்மண் ணைக் கீழ்மேல்வையே. 273

வைத்ததின் மேலண்டநீர்கிண்டலிட்டு வாகான வோடுமேலோடுமூடி, தைத்ததின் மேற்சீலைசெய்து புடங்கோழியாக்கிக் கலந்து தீயாறியபின் எடுத்துப் பாரு, மொய்த்ததொரு பூப்போலேவெளுத்துநீறு மூனை யானநீறுதனைப் பதனம்பண்ணு, தைத்ததொரு செந் தூரந் தயிலஞ்செய்து தடையறவே கழஞ்சிகுரு காச்சிக் கொண்டே. 274

கொண்டதொரு செந்தூரங் கொண்டோமெத்த கொடுமைசெய்யும் நோய்களுக்குக் கூற்றனுகும், விண்ட தேபூநீறுயில்லாவிட்டால் விதமான துரிசிநீறுவேணும் வேணும், கண்டருடநீறுதனிற் சூதங்கட்டுங் காசினியிற் சூதமதுகெவனமாகும், தண்டான சூதமதுசெந்தூரந்தா னலமான வேதையுள்ள கற்பமாமே. 275

கற்பமென்ன பற்பமென்று சொன்னுயானுல் காசி னியிற் கடைகெட்டகழுதை சென்மம், சொற்பமென்று யோகத்தை விட்டாயானுல் சுணங்கனென்றசென்மமவன் மனிதனல்ல நிற்பமென்று மனமுறைந்து யோகம் பார்த்து நினைவாலே சாத்திரத்தைக் கண்டுதேறி, விற் பனமாங் கற்பமுண்டு தீட்சைபெற்று மேதினியிலிருப் பவரே சித்தாமே. 276

சித்தென்ன யோகமென்ன வென்றுயானுற் செடத்தோடே கயிலாயதெரிசனமாமப்பா, செத்ததனுற் பலலென்று மில்லையப்பா செடமல்லோசிவமாச்சு கைலாயமாச்சு, தென்னகர்மென்ன ஞானம்வந்தால் காசியினிற் கோபமல்லோ கர்மமாச்சு, வித்தென்ன கெர்வமது கோபமாச்சு மெய்யான மோட்சமது தண்மையாமே. 277

தண்மையல்லே ஞானத்துக் காதாரமாச்சு சாந்தமல்லோ யோகத்தின் சார்வுமாச்சு, உண்மையெல்லாம் ஞானத்துக்கொடுக்கமாச்சு வுரப்பானசடலமல்லோ மகத்தாம்வீரம், வண்மையல்லோ ஞானமென்றதானமப்பா மகத்தான பெரியோரைபழிப்பார்மாந்த, தண்மையல்லோபூரணமாய் நின்றமார்க்க மாதிமுதற் கற்பமடா வறிந்து கொள்ளே. 278

அறிந்துகொள்ள சேதியொன்று சொல்லக்கேளு அரிதாரமைங்கழஞ்சு வெள்ளையஞ்சு, செறிந்ததொரு சாதிலிங்கமுககழஞ்சு திறமானகெவுரியது யிருகழஞ்சு, பிறந்தமனேசிலைகழஞ்சு கெந்தியொன்று பேரான துரிசுதுத்தங்கழஞ்சுகூட்டி, மறிந்தகருஞ்சீரகமுங் கழஞ்சுநாலு முழுவெள்ளைக் குந்திரிகங் கழஞ்சியொன்றே. 279

ஒன்றுன மிளகுடனே கடுகவ்வீத முரைபபான காரீயங் கழஞ்சுரண்டுடன்றுன சூதமது கழஞ்சுரண்டு பரிவாகவுருக்கியதிற் சேர்த்துக்கொண்டு, நன்றுனமருந்தெல்லாஞ் சுத்திசெய்து நலமான குழிகல்லிலொன்றுய் விட்டு, கன்றுமலிதையறுக்கச் சற்றுகேளு கரிசாலைமேனியொடுபருதிச்சாறே. 280

சாறுவிட்டுமுச்சாறு மூன்றுசாமந் தனியரைத்துயேழுபில்லை தட்டிக்கொண்டு வீறுடைய வெய்யலில் வைத்துக் காய்ந்தபின்பு வெந்தணலில் கல்லைவிட்டுப்

புகையைக்காட்டு, ஆறுபொழுதும் புகைத்துநீரில்மூழ்கு அதின்பிறகு வேருண்டை புகைத்துத்தீரு, கூடவுடனே மூன்றுநாள் நீரின்மூழ்கக் குவலயத்தில் சூலையொடு குட்டந்தீரும். 281

தீருமேகிரந்தியொடு கரப்பன்கட்டு செயலிங்கச் சூலையொடு யோனிச்சூலை, சாறுகின்றபுண்புரைக ளெல் லாந்தீருந் தனமாகுமோர்பாலுந் தயிறுமாகுங், காருமே பத்தியந்தானேழுநாளும் கட்டாது வாய்தனிலே கண்டு பாரு, ஊறிலேயிருக்கின்ற புகையேசெய்தா லுறவான வாய்தனில் வெந்தழுகும்பாரே. 282

அழுகாம லொத்திடமொன் றுரைப்பேன் கேளு ஆட்டினுட புழுக்கையொன்று கோழிமலமொன்று, ஒழு காமலோந்தியொன்று பல்லியொன்று வுற்றுக்கேளானை யொன்று கொண்டுவந்து, நழுவாமல் மூசுறினுட முட்டையொன்று நண்டொன்றுதவளையொன்று நாஞ்சி யொன்று வழுகாதசெம்பொன்று வுள்ளியொன்று வாழ் கடுகு சிரகமூமூலமாமே. 283

மூலமென்ற சித்திரமூலத்திலேடு மிளகுசுக்குமபிணி யொடு காயந்தான்றி, வால்மிளகுசன்னி நாயகமுங்கூட வகைக்கழஞ்சி வீதமடா வைத்துக்கொண்டு, யேலவே சட்டிதனில் வேப்பெண்ணேயோடு யியல்பான நல் லெண்ணெயாமணக்கி னெண்ணே, சாலவே தேங்கா யெண்ணெயாகநாலுந் தான்வகைக்குச் சட்டியினிற் காற் படியாய்வாரே. 284

வார்த்துடனே மருந்தையெல்லாங் கிழியக்கட்டி வைத்தந்த யெண்ணெயிலே கொதிக்கும்போது, எந் தெந்த யெண்ணெயிலே பச்சாநாற்ற மெடுத்துதென்று கண்டவுடன் கிழியைவாங்கி யார்த்தந்தச் சரீரத்திலுச்சி

தொட்டு பதைப்புகள்தோறுங் கிழியைப்பதித்தாயானால் காத்ததோர் சன்னிவகை காணாதோடும் கால்முடக்கு வாதமெல்லாங் கடலிற்புக்குஞ், சீற்றமுள்ள வலிகளைந் துஞ் சிதறிப்போகுந் திறவாதவாய் திறக்குந்தியக்க மாமே. 285

தியங்காமல் மூலத்திற் சேதிகேளு சிவமானகடுக் காய்தானூறுவாங்கி, மயங்காமல்வெள்ளாட்டி நீரில்விட்டு மயமாகவவித்தனை வாங்கிக்கொண்டு, தயங்காமலதை வறுத்துக்கொண்டு சாதகமாய் மெழுகானால் விதையைத் தள்ளு, முயங்காமற்சிவதையதிற் பலந்தானென்று முதி மையுள்ள நன்னாரிகிழங்கொன்றுமே. 286

கிழங்கான வெந்தோன்றிக் கிழங்கதொன்றுகிருபை யுள்ளசாரணையின் கிழங்கதொன்று, வழங்குகின்றபாலத னிற் சுத்திசெய்து வாகாகவுலர்த்தியே பிடித்துத்தூளாய் களங்கமதாய் வடிகொண்டு வெள்ளாட்டின்பால் காய்ந் தாண்டுபடிதனிலே சூரணத்தைப்பாச்சு, இளம்பதமாய் பாகுசெய்து வொருபலஞ்சர்க்கரையை யியல்பாகத் தூற் றியே கிண்டுகிண்டே. 287

கிண்டியே வெள்ளாட்டினெய்படிதான்வாரு கிரு பையுள்ள தேனிலேகால்படிதான்வாரு, சுண்டியே மெழுகுபோற் பதமாம்பாரு சுறுக்காகப்பீங்கானிற் பத னம்பண்ணு, மண்டியுள்ள மூலம்பிற மூலத்தோடு மாறு வகைமூலமெல்லா மகலவென்றால், கொண்டுவிடுகழஞ் சிரண்டு நாளொன்றுக்குங் கூசாம லிருநேரந் தின்றி டாயே. 288

தின்றிடவே யறுமூலகருமந்தீருந் திறமானமூலசல மிரத்தந்தீருங், கன்றிடவே மூலத்திற்றினவு புண்கள் கனமானவாய்விரச்சல் கழிச்சலோடு, கொண்டிடவே தீராதகிராணிமூலங் கூழ்ப்பிச்சுப்புறத்தில்நின்ற முளை மூலந்தான், வின்றிடவே கிராணியென்ற தெல்லாந் தீரும் விம்மிநின்று மலங்கருக்கும் விரணம்போமே.

விரணமாங் கடுப்போடு காந்தல்தீரும் வேணு மென்ற கிராணியெல்லாம் விடுபட்டோடுந், தருணமார்

தாதுபிலந தானுண்டாகுந் தருவான கந்தாதி லேகியந் தான், மரணமது வில்லாத கற்பம்போலே மண்டலந் தான் கொண்டிடவே நோக்கவராலாறுஞ் சரணமென்ற பேதியுள்ள வனுபானங்கள் தானறிந்து கொள்வதற்குச் சத்தியமெண்ணே. 290

சத்தியமே வேணுமடா மனிதனானல் சண்டாளஞ் செய்யாதே தவருகாது, நித்தியகன்மந் தப்பாதே நேம மறவாதே நிட்டையொடு சமாதிவிட்டு நிலைபேராதே, புத்திகெட்டு நடவாதே பொய்சொல்லாதே புண்ணியத் தை மறவாதே பூசைமறவாதே, கத்தியதோர் தர்க்கமிட் டுத் தள்ளிடாதே கண்மியென்று நடவாதே சதிவேண் டுங்காலே. 291

காலென்ற விடகலையிற் கருத்தைவைத்துக் கழியும் நாலங்குலத்தா லதனைக்கட்டிப், பாலென்ற சந்திரனும் பாலையுண்டு பசியாமற் பாதியிலே பரிந்துநில்லு, தோ லென்ற செடமதுதான் கல்லு கல்லு சுகாதீதச் சித்த னென்ற சொல்லுமாச்சு, நூலொன்றுந் தப்பாமல் வழங் கிப்போச்சு நுணுக்கமுள்ள கருக்களெல்லாந் துலக்க மாச்சே. 292

ஆச்சென்ற சித்தியெல்லாந் தீட்சையாலே அதிக முள்ள கருவெல்லா மவுனத்தாலே, போச்சிந்தச் சென்ம மிது சற்பத்தாலே பொருந்தவே யாமுரைத்த பத்தி யாலே, கார்ச்சந்தப் பிராணயாமக் கருவினாலே கனதை பெற்ற மேருவென்ற பூசையாலே, நீச்சென்ற சமுத் திரத்தை நீந்தியேறி நிலைத்தப்பா சிவக்கியான நிலைமை தானே. 293

தானென்ற நாடிநிலை யறியவேணுஞ் சடத்திலுள்ள நோய்குணங்க ளறியவேணும், வாவென்ற மருந்தினங்க ளறியவேணும் மருந்தினுட நுட்பதுமறிந்து வைக்க் வேணும், நானென்ற வாங்கார நிவர்த்திவேணும் நல மாக வடுகனிட பூசைவேணும், கோனென்ற குருவி னுட பாதம்போற்றி குணமாக நடந்தவனே குருபுத்திர னுமே. 294

புத்திரனே யின்னமொரு நெய்தான்கேளு பூலாத்தி வேருடனே பூங்கதலிப்பிஞ்சு, மத்தியின் பிஞ்சுடனே மூத்தக்காசு மகத்தியிலை வெண்காயச் சாறுநெல்லி, சத்திச் சாரணைவேருந் தூதளையின்வேருந் தருவான மலைதாங்கி தக்காலிவில்வஞ், சித்தியுள்ள வல்லாரிசாலை யோடு சிறு நெருஞ்சில்பெரு நெருஞ்சில்சிறு புள்ளடியே. 295

அடியான செருப்படையுஞ் சிறுகீரைதானு மாம்பலொடு குளிர்கொட்டியான நெய்தற்கிழங்கு, செடியான கண்டங் கத்திரியினேடு சிறுமூருங்கை நறுந்துளசி சிவகாந்தை நாயுருவி, கடிதான மூக்குரண்டி செங்கழுநீர்க் கிழங்குங் கருதுநில வேம்புசிறு காஞ்சுரையின் பிஞ்சும், படியான குறுந்தொட்டி ஆடாதோடை பருத்தியின் பிஞ்சுடனே நெய்தற்பூவே 296

பூவான பொடுதலையும பிரமிலானும் புகழும் நறுநிண்டி யோரிதழின்மூலங், காவான செந்தொட்டி கன்னிசிறுபூளை கனத்தாலின் விழுதுடனே கஞ்சாவுங் கொன்றை, நாவானமுது வன்னிபசளை குழிமிட்டான லத்தவம்மான் பச்சரிசி விஷ்ணுமூலி, தேவான கரந்தையொடு பழம் பாசியுடனே சிவந்திருந்த விலந்தையதின் தம்பலமுமன்றே. 297

பலமான மூலிகைதான் வகையொன்றுக்குப் பலமொன்றேர் பலத்துக்கோர்படி நீர்விட்டு, சலமான வெட்டொன்றாய் வற்றக்காச்சி கலத்துக்கு நாலிலொன்று நறுநெய்சேர்த்து, குலமான வதிமதுரங்கோஷ்ட மேலங்குருசானி குந்திரிக்கம் நறுக்குமூலம், பிலமான திரிகடுகு திரிபலாதி போானவதிவிடயஞ் சரக்குவகையாறே. 298

ஆறான வாமதலைக் கொம்புருத்திராட்ச மதிகமாங் கெருடபச்சை சவ்வாதிரதவேதி, கூறானமருந்துவகை கால்பலமாய்வாங்கி குமுறவரை வெள்ளாட்டின் பாலைவிட்டு, சேறாகக் கலக்கியதைப் பாகுசெய்து திரிநாளில் மெழுகுபதஞ் சேரவாங்கி வாறான கணபதிக்குப் பூசித்தேதான் மைந்தருக்குகா செடைதான் வரிசைகேளே.

வரிசையாய் சொல்லுகிறேன் கணங்களேது மாந்த
மொடுசுழிதுரப்பு வலிகளேது, பரிசமாம் பறங்கியொடு
கறப்பனேது பட்சியொடு பறவையுட தோஷமேது,
தெரிசனமாங் கண்களிலே வருவதேது தீர்க்குமடா
சிறுவருக்குந் தேவாமிர்தமாகுங், கரிசனமா யிந்நூலிற்
கர்மதர்மங் கட்டான மருந்துவகை கணக்குமுற்றே. 300

கன்மகாண்டம்-நா.

முற்றுப்பெற்றது.

---


பதினெண் சித்தர்களில் மஹா மகத்துவம் பொருந்திய
போக மஹா முனிவர் அருளிய

## போகர் சப்தகாண்டம் 7000 பாடல்.

மஹா மகிமை வாய்ந்த சித்தர்களுள் நாற்பத்தெண் முனிவர்களும் நவகோடி ரிஷிகளும் ஜீவர்களின்பேரில் உள்ள காருண்யத்தால் 21-இட்சம் கிரந்தங்கள் செய்தருளினர் ஒவ்வொரு கிரந்தத்திலும் அநேக மகத்துவங்கள் நிறைந்த போகர் சப்தகாண்டமாகிய இந்நூலில் அநுபவ வைத்தியமுறைகளும் வாத முறைகளும் சரக்குகளின் கட்டுகள் கற்பங்களின் முறை உப்புவகைகளின் கட்டு வேதைகளும் பாஷாண வகைகளும் விளக்கி இங்கு விரிவாக எழுதுவதற்கு இடந்தராமையால் இத்துடன் நிறுத்துகின்றனம். இதன் விபரமும் புஸ்தகத்தின் விஷய அட்டவணையில் விபரமாய் காண்க.

| | | | |
|---|---|---|---|
| இப்புத்தகம் 1120-பக்கங்கள் கொண்டது இதன் விலை | 3 | 0 | 0 |
| மேற்படி கிளேஸ் கடிதம் ரூபா | 4 | 0 | 0 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| போகர் 1200-பாடல் | 1 | 8 | 0 | அகஸ்தியர் தயில முறை 100-பாடல் | 0 | 4 | 0 |
| போகர் 700-பாடல் | 0 | 10 | 0 | 18-சித்தர் வைத்திய சில்லறை கோர்வை | 1 | 8 | 0 |
| போகர் நிகண்டு 500 | 0 | 10 | 0 | ஷை சிரோரத்தன நடன காண்டம் | 1 | 4 | 0 |
| போகர் ஜனன சாகரம் | 0 | 10 | 0 | | | | |
| அகஸ்தியர் வைத்திய காவியம் 1500 | 1 | 0 | 0 | | | | |

டி சாரதா புத்தகசாலை,
நெ. 23, பாளையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, சென்னை.